ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# நம்பெருமாள் விஜயம்

(மலர் – 13) Jan 2008



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

"ஸ்ரீ அஹோபில தாஸன்" க. ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

> கைப் பொருள்கள் முன்னமே கைக் கொண்டார் காவிரி நீர்
> செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
> எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
> சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப் பொருளும் கொண்டாரே.

## அடியேன் உரை

இந்த மார்கழி மாதத்திற்கு பல சிறப்புகள் உண்டு – திருவரங்கத்தில் அத்யயன உத்சவம் நடைபெறுவதால் சிறப்பு, திருப்பாவை இசைப்பதால் சிறப்பு, மாதங்களில் தான் மார்கழி என்று கண்ணன் கூறியதால் சிறப்பு – என்று அடுக்கிக் கொண்டே செல்லலாம். ஆயினும் இவை அனைத்தையும் விட மேலான ஒரு காரணத்தால் மட்டுமே மார்கழிக்கு சிறப்பு என்று அடித்துக் கூற இயலும். அது என்ன? பெரியபெருமாளைத் தவிர மற்ற யாரையும் பாடேன் என்று அரங்கனார்க்கே ஆட்பட்டு நின்ற தொண்டரடிப்பொடியாழ்வார் இந்த மாதத்தில் அவதரித்த காரணத்தினால்தான் மார்கழிக்கு இத்தனை ஏற்றம் என்பதை நம்பெருமாளால் கூட மறுக்க இயலாது. ஆழ்வாரைப் பற்றிய பெரியதிருமுடியடைவு குறிப்புகள் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன.

இந்த இதழுடன் ஸ்ரீரங்கராஜஸ்த்வம் – பூர்வ சதகம் நிறைவு பெறுகிறது. இது அழகியமணவாளனின் திருவுள்ளத்தாலும், உடையவரின் திருவுள்ளத்தாலும், வியக்கவைக்கும் மதி நிறைந்த ஸ்வாமி பராசரபட்டரின் திருவுள்ளத்தாலும் மட்டுமே நிகழ்ந்தது என்பதில் ஐயம் இல்லை. அடுத்த இதழில் உத்தர சதகம் தொடங்க நம்பெருமாள் திருவுள்ளம் கொள்ளவேண்டும்.

ஸர்வம் க்ருஷ்ணார்ப்பணம் … வாஸுதேவம் ஸர்வம்

ஸ்ரீ அஹோபில தாஸன்

க. ஸ்ரீதரன்

## உட்பொதிவு

1. ஸ்ரீ ரங்கராஜஸ்தவம்
2. ஸ்ரீபாஷ்யம்
3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்
4. முமுக்ஷுப்படி
5. சிறிய திருமடல்
6. திருமாலை
7. தொண்டரடிப்பொடியாழ்வார்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

# ஸ்ரீரங்கராஜஸ்தவம்
## (பகுதி – 13)

121. வைபூஷண்யாம் காந்தி: ஆங்கீ நிமக்நா
விஷ்வத்ரீசீ க்வாபி ஸோங்மாத வ்ருத்தி:
ஜாநே ஜானு த்வந்த்வ வார்த்தா விவர்த்த:
ஜாத: ஸ்ரீமத் ரங்க துங்க ஆலயஸ்ய

பொருள் – (பெரியபெருமாளின் முழங்கால்களை அனுபவிக்கிறார்) திருவரங்கத்தின் பெரியகோயிலில் கண்வளரும் அழகிய மணவாளனின் திருமேனியானது, அவனது ஆபரணங்களால் மேலும் ஒளி வீசியபடி உள்ளது (அவனது திருமார்பு முதலியவைகளால் திருமேனி ஒளி வீசியபடி உள்ளது, அவனது திருஆபரணங்களாலும் ஒளி வீசியபடி உள்ளது). இப்படியாக எங்கும் அந்த ஒளியானது எங்கும் பரவி உள்ளது. அத்தகைய ஒளியானது, ஓரிடத்தில் குவிந்தபடி உள்ளது. இந்த இடமே அவனது முழந்தாள்களோ என்று எண்ணும்படி ஆனது.

122. ஸ்ரீரங்கேசய ஜங்கே ஸ்ரீபூமி ஆமர்ச ஹர்ஷ கண்டகிதே
தத் கேளி நளிந மாம்ஸல நால த்வய லலிதம் ஆசரத:

பொருள் – (பெரியபெருமாளின் கணைக் கால்களைக் கூறுகிறார்) ஸ்ரீரங்கநாச்சியாரும் ஸ்ரீபூமாதேவியும் மெதுவாக பெரியபெருமாளின் கணைக் கால்களை வருடுகின்றனர். அப்போது அவனது திருவடிகள் மயிர்க்கூச்சல் அடைந்தன. அவை காண்பதற்கு முள் போன்று இருந்தன. இப்படியாக உள்ள அவனது திருவடிகள், முள்ளுடன் கூடிய தாமரையின் தண்டுகள் போன்று காணப்பட்டன. அந்த பருத்த தண்டுகள், பிராட்டிமார்களின் திருக்கரங்களின் உள்ள தாமரை மலர்களைச் சுமப்பது போன்று உள்ளது.

123. வந்தாரு ப்ருந்தாரக மௌலி மாலா யுஞ்ஜாந சேத: கமலா கரேப்ய:
ஸங்க்ராந்த ராகௌ இவ பாத பத்மௌ ஸ்ரீரங்கபர்த்து: மநவை நவை ச

பொருள் – (பெரியபெருமாளின் திருவடிகளைக் கூறுகிறார்) இவனை வணங்கியபடி உள்ள தேவர்களின் க்ரீடங்களில் உள்ள கற்களின் ஒளி, யோகிகளின் சிவந்த உள்ளம், ஸ்ரீரங்கநாச்சியாரின் சிவந்த திருக்கரங்கள் – இவற்றில் உள்ள சிவப்பு நிறமானது வந்து படிந்ததோ என்று எண்ணும்படியாக பெரியபெருமாளின் சிவந்த திருவடித் தாமரைகள் உள்ளன. இப்படிப்பட்ட திருவடிகளை நான் த்யானம் செய்து, வணங்கி நிற்பேனாக.

124. யத் ப்ருந்தாவன பண்டிதம் தத் ரவை: யத் தாண்டவம் சிக்ஷிதம்
யத் லக்ஷ்மீ கர ஸௌக்ய ஸாக்ஷி ஜலஜ ப்ரஸ்பர்த் தமாநருத்தி யத்
யத் பக்தேஷு அஜல ஸ்த்தலஜ்ஞும் யத் தூத்ய ப்ரஸங்க உத்ஸுகம்
தத் விஷ்ணோ: பரமம் பதம் வஹது ந: ஸ்ரீரங்கிணோ மங்களம்

பொருள் – பெரியபெருமாளின் எந்த ஒரு திருவடியானது பிருந்தாவனத்தில் சுற்றித் திரிந்ததோ, எந்த ஒரு திருவடியானது யசோதையின் தயிர் கடையும் ஓசைக்கு ஏற்ப நாட்டியம் பயின்றதோ, எந்த ஒரு திருவடியானது ஸ்ரீரங்கநாச்சியாரின் திருக்கரங்கள் மூலம் உண்டாகும் இன்பத்திற்குச் சான்றாக உள்ளதோ, எந்த ஒரு திருவடியானது தாமரை மலருடன் அழகில் போட்டியிடுகின்றதோ, எந்த ஒரு திருவடியானது அடியார்கள் விஷயத்தில் உயர்ந்தவன்–தாழ்ந்தவன் என்ற வேற்றுமை காணாமல் உள்ளதோ, எந்த ஒரு திருவடியானது தூது செல்வதற்காக மிகவும்

ஆசையுடன் உள்ளதோ – அப்படிப்பட்ட திருவடியானது நமக்கு அனைத்து நன்மைகளையும் அளிக்கவேண்டும்.

விளக்கம் – பிருந்தாவனத்தில் சுற்றிய களைப்பு தீரும்படியும், ஆய்ச்சியின் மத்து ஓசைக்கு ஏற்ப நாட்டியம் செய்த களைப்பு நீங்கும்படியும் இவனது திருவடிகளை ஸ்ரீரங்கநாச்சியார் மெல்ல வருடுகிறாள். இவனது திருவடிகளைப் பிடிப்பதால்தான் ஸ்ரீரங்கநாச்சியாரின் திருக்கரங்கள் மென்மையாகவும், சிவந்தும் விளங்குகின்றன எனலாம். அவள் அவதரித்த தாமரை மலருடன் இந்தத் திருவடிகள் சண்டை செய்தபடி உள்ளதாகக் கூறுகிறார். அந்தத் தாமரையில் பிறந்ததால் பிராட்டிக்கு மென்மையா, அல்லது இவன் திருவடிகளின் மென்மை பிராட்டியிடம் குடிகொண்டனவா என்று சண்டை இடுகின்றன போலும். ஆயர்கள், குரங்குகள், பசுக்கள், மாலாக்காரர், கூனி என்று பலரிடமும் ஏற்றத்தாழ்வு இன்றி இவனை அவர்களிடம் இட்டுச் சென்றது இந்தத் திருவடிகள் அல்லவா? பட்டரிடம் ஒருவர் – கண்ணனுக்கு உள்ளது போல் இராமனுக்குத் தூது சென்ற பெருமை இல்லையே – என்று கூறினாராம். அதற்குப் பட்டர் – அந்தக் குறை நீங்கவே உயர்ந்த க்ஷத்ரிய குலத்தை விடுத்து, இடையனாக நின்று, தூது சென்றான் – என்றார்.

125. சிஞ்ஜாந ச்ருதி சிஞ்ஜிநீ மணிரவை: வஜ்ர அரவிந்த த்வஜ
ச்சத்ர் கல்பக சங்க்க சக்ர முகுரை: தை: தை: ச ரேகாமயை:
ஐச்வர்யேண ஜயம் த்ரிவிக்ரம முகம் குஷ்யத்பி: ஆம்ரேடிதம்
ஸ்ரீரங்கேசய பாத பங்கஜயுகம் வந்தாமஹே ஸுந்தரம்

பொருள் – பெரியபெருமாளின் திருவடிகளில் சதங்கைகள் கட்டப்பட்டுள்ளன. அவை வேதங்களுக்கு ஒப்பான ஓசையை எழுப்பியபடி உள்ளன. இதன் மூலம் அனைவருக்கும் இவனே ஸர்வேச்வரன் என்பதையும், த்ரிவிக்ரமானக நின்று செய்தருளிய லீலா வினோதங்களையும் பறை சாற்றி வெளிப்படுத்துவதாக இந்தச் சதங்கைகள் உள்ளன. இவனது திருவடிகள் – வஜ்ரம், தாமரை, கொடி, குடை, கற்பகமரம், சங்கு, சக்கரம், கண்ணாடி முதலான ரேகைகளுடன் கூடியவைகளாக உள்ளன. இப்படிப்பட்ட தாமரை போன்ற திருவடிகளை நாம் வணங்குவோமாக.

விளக்கம் – பெரியபெருமாளின் திருவடிகளில் உள்ள சதங்கைகள் இவனது பல பெருமைகளையும் அறிவிப்பதாகக் கூறுகிறார். பெரியாழ்வார் – ஒரு காலில் சங்கு ஒரு காலில் சக்கரம் – என்று அருளிச்செய்தது போன்று இவரும் கூறியது காண்க.

126. புநாநி புவநாநி அஹம் பஹுமுகீ ஸதி ஸர்வ அங்குலீ
ஜலஜ்ஜலித ஜாஹ்நவீ லஹரி ப்ருந்த ஸந்தேஹதா:
திவா நிசி ச ரங்கிண: ச சரண சாரு கல்பத்ரும
ப்ரவால நவமஞ்ஜரீ: நக ருசீ: விகாஹேமஹி

பொருள் – (பெரியபெருமாளின் திருவடி விரல்கள் மற்றும் நகங்களைக் கூறுகிறார்) கங்கையைப் போன்று நானும் இந்த உலகில் பாய்ந்து, அனைத்தையும் தூய்மை பெறச்செய்வேன் – என்று எண்ணியபடி பெரியபெருமாளின் திருவடிகளின் விரல்கள் உள்ளன. இவற்றைப் பார்க்கும்போது பெருத்த ஓசையுடன் பாய்ந்து வரும் கங்கையின் அலைகளோ என்று எண்ணும்படி உள்ளன. இப்படியாக நமக்கு ஐயத்தை உண்டாக்குகின்றதும், கற்பக வ்ருக்ஷம் போன்றுள்ளதும் ஆகிய அவனது திருவடிகளில் – அந்தக் கற்பக வ்ருக்ஷத்தின் கிளைகள் போன்ற விரல்களில் உள்ள மலர்க்கொத்துக்கள் போன்று, ஒளி வீசியபடி அவனது நகங்கள் உள்ளன. இவற்றை நாம் இரவும் பகலும் இடைவிடாது அனுபவிப்போமாக.

விளக்கம் – பெரியபெருமாள் த்ரிவிக்ரமனாக உயர்ந்தபோது அவனது திருவடிகளில் இருந்து வெளிவந்தவள் கங்கை ஆவாள். அந்த கங்கையானது திருவரங்கத்தில் வெளிவர முனைவது போன்று பெரியபெருமாளின் திருவடி விரல்கள் உள்ளன என்றார்.

127. ஸ்ரீரங்க இந்தோ: பத கிஸலயே நீலமஞ்ஜீர மைத்ர்யா
வந்தே வ்ருந்த ப்ரணயி மதுபவ்ராத ராஜீவ ஜைத்ரே
நித்ய அப்யர்ச்சா நத விதிமுக ஸ்தோம ஸம்சய்யமானை:
ஹேம அம்போஜை: நிபிட நிகடே ராம ஸீதா உபநீதை:

பொருள் – (பெரியபெருமாளின் திருவடிகளை வணங்கி நிற்கிறார்) நீல நிற இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட சிலம்புகள் கொண்ட திருவடிகள் எப்படி உள்ளன என்றால், வண்டினங்களால் மொய்க்கப்படும் அடிப்பகுதி உடைய தாமரையை அழகால் வென்று வீழ்த்தும்படி உள்ளன. ஸ்ரீராமனும் சீதையும் ஆராதனை செய்தபோது, அவர்கள் ஸமர்ப்பித்த பொன்னால் ஆன தாமரை மலர்கள் இவனது திருவடிகளில் இடைவெளி இன்றி நிறைந்துள்ளன. அந்த பொன் மலர்களைக் காணும்போது, இவனது திருவடிகளில் அன்றாடம் பணிந்து ஆராதிக்கும் ப்ரம்மனின் முகங்களோ என்று எண்ணும்படியாக உள்ளன. திருவரங்கத்தின் சந்திரனாகிய உள்ள பெரியபெருமாளின் இப்படிப்பட்ட திருவடிகளை வணங்குகிறேன்.

விளக்கம் – ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீராமனால் ஆராதிக்கப்பட்டவன் என்பது ப்ரஸித்தமான விஷயமாகும். இதனை இங்கு பட்டர் உறுதி செய்கிறார். ஸ்ரீராமனும் சீதையும் இவனது திருவடிகளில் ஸமர்ப்பித்த மலர்கள் இன்னமும் காணப்படுவதே இதற்கு ஆதாரம் என்று கூறினார். இப்படிப்பட்ட பெரியபெருமாளின் திருவடிகளை வணங்குவதாகக் கூறி, பூர்வ சதகத்தை நிறைவு செய்தார்.

ஸ்ரீபராசர பட்டர் திருவடிகளே சரணம்

## ஸ்ரீரங்கராஜ ஸ்தவம் பூர்வ சதகம் ஸம்பூர்ணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ஸ்ரீபாஷ்யம்
(பகுதி – 13)

## அதிகரணம் – 8 – பலாதிகரணம்

ஆராயப்படும் விஷயம் – அனைத்துக் கர்மங்களின் பலனையும் பரமாத்மாவே அளிக்கிறான் என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

### 3–2–37 பலமத உபபத்தே:

பொருள் – பரம்பொருளிடமிருந்தே பலன்கள் கிட்டுகின்றன, இதுவே பொருந்துகிறது.

விஷயம் – ஜீவன் தனது அனைத்து நிலைகளிலும் தோஷங்களுடன் கூடியவன் என்பது விளக்கப்பட்டது. மேலும் ஜீவனுக்கு உபாஸனத்தின் மீது ஈடுபாடு வரவேண்டும் என்பதற்காக – உபாஸிக்கப்பட வேண்டிய ப்ரஹ்மம் தோஷங்கள் அற்றது, அனைத்துத் திருக்கல்யாண குணங்களுடன் கூடியது, அனைத்தையும் விட மிக உயர்ந்தது – என்று விளக்கப்பட்டது. இனி அத்தகைய உபாஸனம் குறித்துக் கூற உள்ளார். இத்தகைய உபாஸனையின் பலனாகக் கிட்டப் போகும் மோக்ஷம் என்னும் பரமபுருஷனை அடையும் பலன் என்பது, அவ்விதம் உபாஸிக்கப்படும் பரமபுருஷனாலேயே அளிக்கப்படுகிறது என்று கூற உள்ளார். இந்த உலகில் யார் ஒருவன் அளிப்பவனாக உள்ளானோ, அவனையே அனைவரும் அண்டுவதைக் காணலாம். இதே போன்று இங்கு கூறுகிறார்.

சந்தேகம் – (இந்தப் பத்தி பாஷ்யத்தில் இல்லை. இந்த உரையைத் தெளிவாக்கும் விதமாகக் கூறப்பட்டது). இந்தப் பலனை அளிப்பது யார்? அந்தக் கர்மமே அதற்கான பலனை அளிக்கிறதா? பரம்பொருள் அளிக்கிறானா? கர்மம் மூலம் உண்டான பலன் நமக்கு அந்தப் பலனை அளிக்கிறதா?

ஸித்தாந்தம் – (இந்த சூத்திரத்தில் முதலில் ஸித்தாந்தம் கூறப்படுகிறது) முக்தியானது பரமபுருஷனிடமிருந்தே கிட்டுவது போன்று, சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள பலன்கள் – இந்த உலகத்தில் அனுபவிக்கத் தக்க பலன்கள் அனைத்தும் பரமபுருஷனிடம் இருந்தே கிட்டுகின்றன. இதனையே பலம் அத: என்றார். இவ்விதம் கூற ஆதரம், காரணம் என்ன? எங்கும் உள்ளவனும், அனைத்தும் அறிந்தவனும், அனைத்து வல்லமை கொண்டவனும், உதார குணம் மிக்கவனும் ஆகிய பரமபுருஷன் – யஜ்ஞம், தானம், ஹோமம் முதலானவற்றைக் கண்டும், தனது உபாஸனத்தாலும் ஆராதிக்கப்பட்டு, மிகவும் மகிழ்ந்து நிற்கிறான். இதனால் அவன் ஸ்வர்கம் முதலான பலன்களையும், மோக்ஷத்தையும் அளிக்கிறான். அசேதனமாக உள்ளதும், க்ஷண நேரத்தில் அழியக்கூடியதும் ஆக உள்ள கர்மங்கள், சிறிது காலத்திற்குப் பின்னர் அதன் பலன்களை அளிக்கக் கூடியவை அல்ல.

### 3–2–38 ச்ருத்தவாத் ச

பொருள் – இப்படியே ச்ருதி வரிகள் கூறுகின்றன.

ஸித்தாந்தம் – கீழே உள்ள ச்ருதி வரிகள் மூலமாகப் பரமபுருஷனே பல போகங்களையும் மோக்ஷத்தையும் அளிக்கிறான் என்பது தெளிவாகிறது.

- ப்ருஹத் உபநிஷத் (4–4–24) – ஸ வா ஏஷ மஹாந் அஜ ஆத்மா அந்நாத: வஸுதாந: – பிறப்பற்றவனாக உள்ள பரமாத்மா அன்னத்தையும் தனத்தையும் அளிக்கிறான்.

- தைத்திரீய ஆரண்யகம் (2–7) – ஏஷ ஹ்யேவாநந்தயாதி – பரமபுருஷனே மோக்ஷம் என்ற ஆனந்தம் அளிக்கிறான்.

### 3–2–39 தர்மம் ஜைமிநி: அத ஏவ

பொருள் – தர்மம் முதலியவைகளே பலன் அளிப்பதாக ஜைமிநி கூறுகிறார்.

பாஷ்யம் (கடந்த இரு சூத்திரங்களில் கூறப்பட்ட ஸித்தாந்தத்தின் பூர்வபக்ஷம் இதுவாகும்) – இனி பூர்வபக்ஷத்தைக் கூறுகிறார். அத ஏவ – முன்பு கூறப்பட்ட பழக்கவழக்கங்கள் மற்றும் சாஸ்திரங்களின் காரணமாக, ஜைமினி முனிவர் கருதுவது – யாகம், தானம், ஹோமம், உபாஸனம் ஆகியவையே போகம் மற்றும் மோக்ஷ பலன்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அளிப்பதைக் காண்கிறோம். வேதங்களில் கூட யாகம், தானம், ஹோமம் போன்ற கர்மங்கள் நேரடியாகப் பலனை அளிப்பதில்லை என்றாலும், கண்களுக்குப் புலப்படாத வகையில் (அபூர்வா) அந்தக் கர்மங்கள் எதிர்காலத்தில் அப்பலன்களை அளித்து விடுகின்றன. சாஸ்திரத்தில் – யஜேத ஸ்வர்க்க காம: – ஸ்வர்க்கம் விரும்பும் ஒருவன் யாகம் இயற்றக் கடவன் – என்பதைக் காண்க. இதன் மூலம் யாகம் இயற்றும் ஒருவனுக்கு ஸ்வர்கம் கிட்டுகிறது என்பது புலனாகிறது. இதன் மூலம் அபூர்வம் என்பதன் மூலம், இயற்றப்பட்ட கர்மமே அதற்கான பலனை அளிக்கிறது என்றாகிறது.

### 3–2–40 பூர்வம் து பாதராயண: ஹேதுவ்யபதேசாத்

பொருள் – (மேலே உள்ள சூத்திர பூர்வபக்ஷத்திற்கு உரியது). சூத்திரத்தில் உள்ள து என்ற பதம் கடந்த சூத்திரத்தின் பூர்வபக்ஷத்தைத் தள்ளுகிறது. சூத்திரம் 3–2–37ல் கூறியபடி பரமபுருஷனே அனைத்துப் பலன்களையும் அளிப்பதாக பாதராயணர் கருதுகிறார். ஏன்? ஹேதுவ்யபதேசாத் – வாயு, அக்னி முதலான தேவதைகளைக் குறித்து யாகம் இயற்றும்போது, யஜ் என்ற பதம் மூலம் அந்த யாகங்களின் எஜமானனாக உள்ள அந்தந்த தேவதைகளே பலன்கலை அளிக்கின்றன என்று கூறப்பட்டது. இதனை தைத்திரீய ஸம்ஹிதை (2–1–1) – வாயவ்யம் ச்வேதமாலபேத பூதிகாமோ வாயுர்வைக்ஷேபிஷ்டா தேவதா வாயுமேவ ஸ்வேந பாகதேயேநோபதாவதி ஸ ஏவைநம் பூதிம் சமயதி – ஐச்வர்யம் விரும்பும் ஒருவன் வாயுவை தேவதையாகக் கொண்ட ச்வேதயாகம் இயற்றுவானாக, வாயு மிகவும் வேகமாக செல்லும் தேவதையாகும், இவ்விதம் யாகம் இயற்றுபவன் தனது பாக்கியம் காரணமாக வாயுவை ஆராதிக்கின்றான், அப்படிப்பட்ட வாயு இவ்விதமாக யாகம் இயற்றியவனுக்கு ஏற்ற ஐச்வர்யம் அளிக்கிறான் – என்றது. இது போன்று வரிகளை வெறும் அர்த்தவாதங்கள் (துதிப்பதற்காகக் கூறப்பட்ட வரிகள், இவை முக்கியம் அல்ல) என்று தள்ள இயலாது. யாகத்தைச் செய்ய வேண்டும் என்று கூறும் விதிவாக்கியங்களுக்கு, அந்த தேவதைகளின் பெருமையை உணர்த்தும் அர்த்தவாத வரிகளும் அவசியம் என்று பூர்வமீமாம்ஸையில் உள்ளது. ஆகவே இது போன்ற வரிகளை ஒதுக்க இயலாது. இப்படியாக, அந்தந்த யாகங்களின் மூலம் ஆராதனை செய்யப்பட்ட தேவதைகள் மனம் மகிழ்ந்து, அந்த யாகங்களுக்கான பலன்களை அளிப்பதாக வேத வரிகள் தெளிவாகக் கூறுகின்றன. இதனை மறுத்து, கண்களுக்குப் புலப்படாத அபூர்வம் என்னும் கருத்தை உருவாக்கி, அதுவே பலன் அளிப்பதாகக் கூறுவதை ப்ரமாணிகர்கள் (உண்மையைத் தகுந்த சான்றுடன் மட்டுமே ஏற்பவர்கள்) ஏற்கமாட்டார்கள்.

இதற்கு மறுப்பாக பூர்வபக்ஷிகள் – யஜேத என்ற பதம் யஜ் என்ற தாது, மற்றும் ஏத என்ற இரு பிரிவுகளாக உள்ளது. இவற்றில் யஜ் என்பது தேவதை ஆராதனம் என்று கொண்டாலும், பின்னால் உள்ள பதமானது அபூர்வம் என்பதைக் குறிப்பதாகவே கொள்ளவேண்டும் – என்று கூறலாம். இதனை ஏற்க இயலாது. அந்தப் பதங்கள் கர்த்தாக்கள் மூலமாக இயற்றப்படும் கர்மங்களை மட்டுமே குறிக்கின்றன. இவ்விதம் கொண்டால் மட்டுமே இலக்கண ரீதியாகவும் பொருந்தும், இதனை விடுத்து, உலக வழக்கில் இல்லாத ஒரு அர்த்தத்தைக் கற்பிக்கக்கூடாது.

மேலே உள்ளதை உணர்த்தும் விதமாகவே தைத்திரீய ஸம்ஹிதை (2–1–1) – வாயுர்வை க்ஷேபிஷ்டா தேவதா – வாயுவே வேகமாக நகர்பவன் – போன்ற வரிகளின் மூலம் வாயு முதலான தேவதைகளே பலன் அளிக்கின்றன என்று கூறியது. ஆயினும் ஆராதிக்கத் தகுந்தவனாக உள்ள பரமபுருஷனே, வாயு முதலான தேவதைகளின் அந்தர்யாமியாக இருந்து கொண்டு, அனைத்துப் பலன்களையும் அளிக்கிறான் என்பதை தைத்திரீய நாராயணவல்லி (1–2) – இஷ்டாபூர்த்தம் பஹுதா ஜாதம் ஜாயமாநம் விச்வம் பிபர்த்தி புவநஸ்ய நாபி: தத்தேவாக்நிஸ்தத் வாயுஸ்தத் ஸூர்யஸ்தது சந்த்ரமா: – வருங்காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற அனைத்துக் காலங்களிலும் செய்யத்தக்கவை என்று கூறப்படும் யாகங்கள், குளம் வெட்டுதல் முதலிய செயல்கள் போன்ற கர்மங்களை, அவற்றுக்கான பலன் அளிப்பவனாக உள்ள பரமாத்மாவே ஏற்கிறான், அவனே அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளான், அவனே அக்னி, வாயு, சூரியன், சந்திரன் ஆகியவற்றின் அந்தர்யாமி – என்று கூறியது.

பரம்பொருளே அனைத்தின் அந்தர்யாமியாக உள்ளான் என்பதைக் கீழே உள்ள பல வரிகளில் காணலாம்:

- ப்ருஹத் உபநிஷத் (3–7–7) – யோ வாயௌதிஷ்டந் யஸ்ய வாயு: சரீரம் – யார் வாயுவில் உள்ளானோ, யாருக்கு வாயு சரீரமோ

- ப்ருஹத் உபநிஷத் (3–7–5) – யோ அக்நௌ திஷ்டந் – யார் அக்னியில் உள்ளானோ

- ப்ருஹத் உபநிஷத் (3–7–9) – ய ஆதித்யே திஷ்டந் – யார் சூரியனில் உள்ளானோ

இதே கருத்து ஸ்ம்ருதிகளில் பின்வருமாறு உள்ளது:

- ஸ்ரீமத் பகவத் கீதை (7–21) – யோ யோ யாம் யாம் தநும் பக்த: ச்ரத்தயா அர்ச்சிதும் இச்சதி தஸ்ய தஸ்ய அசலாம் ச்ரத்தாம் தாம் ஏவ விததாம் யஹம் – யார் யார் தனது சரீரமாக உள்ள சூரியன், இந்திரன், வாயு, அக்னி முதலிய தேவதைகளை விச்வாசத்துடன் ஆராதிக்க விரும்புகின்றனரோ, அவர்களுக்கு அந்தந்த தேவதைகளின் அந்தர்யாமியாக நானே இருந்து கொண்டு, அவர்கள் மீது அந்த பக்தர்கள் கொள்ளும் நம்பிக்கைக்கு இடையூறு இல்லாமல், அசையாமல் நிலைநிறுத்துகிறேன்.

- ஸ்ரீமத் பகவத் கீதை (7–22) – ஸ தயா ச்ரத்தயா யுக்த: தஸ்யாராதநமீஹதே லபதே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந் – அப்படிப்பட்ட அந்தந்த தேவர்களின் பக்தர்கள் அந்தந்த தேவதைக்கு உரிய ஆராதனையில் நம்பிக்கையுடன் ஈடுபடுகின்றனர். இதன் மூலம் அந்த தேவதைகளுக்கு என்னால் கொடுக்கப்பட்ட பொருளை, அந்தந்த பக்தர்கள் அந்த தேவதை மூலம் பெறுகின்றனர்.

- ஸ்ரீமத் பகவத் கீதை (9–24) – அஹம் ஹி ஸர்வ யஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச – அனைத்து யஜ்ஞங்களையும் நானே அனுபவித்து, அவற்றின் பலன்களை நானே அளிக்கிறேன். இங்கு உள்ள ப்ரபு என்ற பதம் அனைத்து பலன்களையும் அளிப்பவன் என்ற பொருளில் உள்ளது.

- ஸ்ரீமத் பகவத் கீதை (7–23) – தேவாந் தேவயஜோ யாந்தி மத்பக்தா யாந்தி மாமபி – தேவர்களை ஆராதிப்பவர்கள் அவர்களிடம் செல்கின்றனர், என்னை ஆராதிப்பவர்கள் என்னையே அடைந்து விடுகின்றனர்.

- ஸ்ரீமத் பகவத் கீதை (9–25) – யாந்தி மத்யாஜிநோபிமாம் – என்னைக் குறித்து யாகம் இயற்றுபவர்கள் என்னையே அடைகின்றனர்.

இந்த உலகில் நாம் காண்பது – பயிர் செய்தல் முதலான தொழில்களால் பல பொருள்களையும் சம்பாதித்த பின்னர், அந்தப் பொருள்களைக் கொண்டு அரசனை நேரடியாகவோ அல்லது அவனுடைய வேலையாட்கள் மூலமாகவோ உகப்படையச் செய்வதை நாம் காணலாம். இவ்விதம் ஆராதிக்கப்பட்ட அரசன், ஆராதனைக்கு ஏற்ற பலனை அளிப்பதையும் காணலாம். வேதங்கள் கூறுவது – சாஸ்த்ரம் மூலம் மட்டுமே அறியப்படுபவனாக, வேறு எந்தப் ப்ரமாணம் மூலமும் அறியப்படாதவனாக, அவித்யை முதலான எந்தவிதமான தோஷங்களும் சிறிதும் அற்றவனாக, எல்லையற்றதும் அளவற்றதும் ஆகிய திருக்கல்யாண குணங்களின் இருப்பிடமாக உள்ளவனாக, உதாரகுணம் நிரம்பியவனாக புருஷோத்தமன் உள்ளான், இப்படிப்பட்ட அவனுடைய ஆராதனை ரூபங்களாக யாகம், தானம், ஹோமம் போன்றவை உள்ளன, இந்த ஆராதனை என்பது ஸ்துதி, நமஸ்காரம், மேன்மை கூறுதல், அர்ச்சனை, கீர்த்தனை போன்றவையாகும். இப்படியாக ஆராதிக்கப்பட்ட அந்தப் பரமபுருஷனிடமிருந்தே ஸ்வர்கம் போன்ற போகங்களும், மோக்ஷமும் கிட்டுகிறது – என்பதாகும். எனவே அனைத்து அர்த்தவாதங்களும் பொருந்திவிடுகின்றன.

## ஸ்ரீபாஷ்யம் மூன்றாம் அத்தியாயம் இரண்டாம் பாதம் ஸம்பூர்ணம்

தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாதன் திருவடிகளே சரணம்
ஸ்ரீ வேதாந்த தேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்ரீ வேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 13)

வ்யூஹங்கள் நாலென்றும் மூன்றென்றும் சாஸ்திரங்கள் சொல்லும். நாலு வ்யூஹமுண்டாயிருக்க வ்யூஹ வாஸுதேவரூபத்துக்குப் பரரூபத்திற்காட்டில் அனுஸந்தேய குணபேதமில்லாமையாலே த்ரிவ்யூஹமென்கிறது. இப்பக்ஷத்தை

குணைஷ்ஷட்பிஸ்த்வேதை: ப்ரதமதர மூர்த்தஸ்தவ பபௌ
ததாஸ்திஸ்ரஸ்தேஷாம் த்ரியுக யுகளைர்ஹி த்ரிபிரபு:

என்கிற ச்லோகத்தில் ஸங்க்ரஹித்தார்கள். இப்பரவ்யூஹங்களில் குண க்ரியா விபவங்கள்,

ஷாட்குண்யாத் வாஸுதேவ: பர இதி ஸபவாந் முக்தபோக்யோ பலாட்யாத்
போதாத் ஸங்கர்ஷண: த்வம் ஹரஸி விதனுஷே சாஸ்த்ரம் ஐச்வர்ய வீர்யாத்
ப்ரத்யும்ந: ஸர்க்கதர்மௌ நயஸிச பகவந் சக்தி தேஜோநிருத்த:
பிப்ராண: பாஸி தத்வம் கமயஸி ச ததா வ்யூஹ்ய ரங்காதிராஜ

என்கிற ச்லோகத்திலே ஸங்க்ரஹிக்கப்பட்டன. ஜாக்ரதாதிபதபேதங்களிலுள்ள விசேஷங்களெல்லாம்

ஜாக்ரத்ஸ்வப்நாத்யலஸ துரீயப்ராய த்யாத்ருக்ரமவதுபாஸ்ய:
ஸ்வாமிந் தத்தத்குண பரிவர்ஹ: சாதுர்வ்யூஹம் வஹஸி சதுர்த்தா

என்று ஸங்க்ருஹீதங்களாயிற்று.

விளக்கம் – சாஸ்த்ரங்கள் வ்யூஹங்களானவை நான்கு என்றும், மூன்று என்றும் கூறுகின்றன. நான்காகக் கூறப்படும் இடங்களில் வாஸுதேவன் அவற்றுள் ஒருவன் என்று கூறுவதுண்டு. இப்படிக் கொள்ளும்போது, வ்யூஹ வாஸுதேவனுக்கும், பரவாஸுதேவனுக்கும் த்யானிக்கத்தகுந்த குணங்களில் பேதம் இல்லை என்பதால், இரண்டும் ஒன்றே எனக் கொண்டு, வ்யூஹம் என்பது மூன்று எனலாம். வ்யூஹங்கள் மூன்று எனக் கூறுபவர்கள் கீழே உள்ள ஸ்ரீ வரதராஜ ஸ்தவ (16) ச்லோகத்தின் மூலம் இவ்விதம் கூறுகின்றனர்:

குணைஷ்ஷட்பிஸ்த்வேதை: ப்ரதமதர மூர்த்தஸ்தவ பபௌ
ததாஸ்திஸ்ரஸ்தேஷாம் த்ரியுக யுகளைர்ஹி த்ரிபிரபு:

இதன் பொருள் – வரதனே. உன்னுடைய பரவாஸுதேவ ரூபம் என்பது ஆறு குணங்களால் விளங்கியது, அதன் பின்னர் உண்டான மூன்று வ்யூஹங்கள் (ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன்) இந்த ஆறு குணங்களிலிருந்து இரண்டிரண்டு குணங்களை எடுத்துக் கொண்டன – என்பதாகும். இத்தகைய பர-வ்யூஹங்களின் குணங்களைக் கீழே உள்ள ஸ்ரீரங்கராஜ ஸ்தவ (2-39) ச்லோகத்தில் காணலாம்:

ஷாட்குண்யாத் வாஸுதேவ: பர இதி ஸபவாந் முக்தபோக்யோ பலாட்யாத்
போதாத் ஸங்கர்ஷண: த்வம் ஹரஸி விதநுஷே சாஸ்த்ரம் ஐச்வர்ய வீர்யாத்
ப்ரத்யும்ந: ஸர்க்கதர்மௌ நயஸிச பகவந் சக்தி தேஜோநிருத்த:
பிப்ராண: பாஸி தத்வம் கமயஸி ச ததா வ்யூஹ்ய ரங்காதிராஜ

இதன் பொருள் – ஸ்ரீரங்கநாதனே. ஆறு குணங்களுடன் கூடிய பரவாஸுதேவன் என நீயே உள்ளாய். இப்படியாக உள்ள நீ முக்தர்களால் அனுபவிக்கப்படுகிறாய். ஸங்கர்ஷணனாக பலம், ஞானம் கொண்டு இந்த உலகை ஸம்ஹாரம் செய்கிறாய். ப்ரத்யும்நனாக ஐச்வர்யம் மற்றும் வீர்யம் கொண்டு உலகைப் படைத்து, தர்மத்தை நிலைநிறுத்துகிறாய். அநிருத்தனாக சக்தி மற்றும் தேஜஸ் கொண்டு உலகைக் காப்பாற்றி, தத்துவங்களை விளக்கியபடி உள்ளாய் – என்பதாகும். விழிப்பு நிலை முதலான பல்வேறு நிலைகளின் வேறுபாடுகள் கீழே உள்ள ஸ்ரீரங்கராஜ ஸ்தவ (2–40) ச்லோகத்தில் சுருக்கமாகக் கூறப்பட்டது (இந்த நிலைகளைக் குறித்த விவரங்கள் ஸ்ரீபாஷ்யத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. நம்பெருமாள் விஜயத்தின் கடந்த வெளியீடுகளில் இவற்றைக் கண்டு கொள்க):

ஜாக்ரத்ஸ்வப்நாத்யலஸ துரீயப்ராய த்யாத்ருக்ரமவதுபாஸ்ய:
ஸ்வாமிந் தத்தத்குண பரிவர்ஹ: சாதுர்வ்யூஹம் வஹஸி சதுர்த்தா

இதன் பொருள் – ஸ்ரீரங்கநாதா! உன்னைத் த்யானிப்பவர்களில் ஒரு சிலர் விழிப்பு நிலையில் உள்ளனர் (இவர்களின் புலன்கள் இயங்கியபடி உள்ளன), ஒரு சிலர் கனவு நிலையில் உள்ளனர் (இவர்களின் புலன்கள் உறங்கியபோதிலும் மனம் விழித்துக் கொண்டுள்ளது), ஒரு சிலர் கனவுகள் அற்ற ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளனர் (இவர்களின் புலன்கள், மனம் போன்ற எதுவும் இயங்குவதில்லை, மூச்சு மட்டுமே சீராக இருக்கும்), மேலும் சிலர் மயக்க நிலையில் உள்ளனர் (இவர்களின் மூச்சும் சீராக இருப்பதில்லை), இப்படியாக நீயும் உன்னை நான்கு ரூபங்களாகப் பிரித்துக் கொண்டு, அந்தந்த ரூபத்திற்கு ஏற்ற குணங்கள் மற்றும் ஆயுதங்களைக் கொண்டுள்ளாய் – என்பதாகும்.

கேசவாதிகளான பன்னிரண்டு ரூபங்களும் வ்யூஹாந்தரங்கள். விபவங்களாவன பத்மநாபாதிகளான முப்பத்துச் சின்ன ரூபங்கள். இவற்றில் மத்ஸ்ய கூர்மாதிகளான அவதாரங்கள் ஒரு ப்ரயோஜனவசத்தாலே விசேஷித்துச் சொல்லப்பட்டன. இவ்விபவங்களில் ஈச்வரன் அவ்வோ கார்யவிசேஷங்களுக்கு ஈடாகத்தான் வேண்டின குணங்களை வேண்டினபோது மறைத்தும், வேண்டினபோது ப்ரகாசிப்பித்தும் நடத்தும். இவற்றில் அவாந்தரபேதங்கள் க்ருஷ்ணரூபாண்யஸங்க்யாநி இத்யாதிகளிற்படியே அநந்தங்கள். இப்படியே விபவாந்தரங்களும் கண்டு கொள்வது. சில ஜீவர்களை விக்ரஹ விசேஷத்தாலும் சக்தி விசேஷத்தாலும் அதிஷ்டித்து அதிசயித்த கார்யங்களை நடக்கிறதுவும் விபவபேதம்.

விளக்கம் – கேசவன் முதலான பன்னிரண்டும் வ்யூஹத்திலிருந்து வெளிப்படும் மற்ற ரூபங்கள் ஆகும். விபவங்கள் என்பவை பத்மநாபன் முதலான முப்பது ரூபங்கள் ஆகும். இந்த முப்பதில் மத்ஸ்யம், கூர்மம் போன்றவை ஒரு குறிப்பிட்ட செயலுக்காக வெளிப்பட்டதாகும். இத்தகைய விபவ அவதாரங்களில், அந்த அவதாரத்திற்கு ஏற்ப, தான் அந்த அவதாரம் எடுத்த நோக்கத்திற்கு ஏற்ப, ஈச்வரன் தனது ஒரு சில குணங்களை மட்டுமே வெளிப்படுத்தியும், சில குணங்களை மறைத்தபடியும் உள்ளான். இவைகளில் உள்ள உட்பிரிவுகளுக்கு கணக்கில்லை. பாஞ்சராத்ர ஆகமம் – க்ருஷ்ணரூபாண்யஸங்க்யாநி – கண்ணனின் ரூபங்கள் எல்லையற்றவை – என முழங்கியது. விபவ அவதாரங்களில் உள்ள பலவற்றையும் சாஸ்த்ரங்கள் மூலம் உணரலாம். ஒரு சில ஜீவன்களுக்குள் ஈச்வரன் தன்னுடைய ரூபத்துடனோ அல்லது சக்தியை மட்டுமோ புகுத்தி எண்ணற்ற அதிசயங்களைச் செய்கிறான். இவையும் விபவங்களின் பிரிவே ஆகும்.

பர வ்யூஹாதி ரூபங்கள் தாமே ஆஸ்ரிதர்க்காக அவர்கள் அபேக்ஷித்தபடியிலே பிம்பாக்ருத்யாத்மநா பிம்பே ஸமாகத்யாவதிஷ்டதே என்கிறபடியே நிற்கிற நிலை அர்ச்சாவதாரம்.

விளக்கம் – பர, வ்யூஹ மற்றும் விபவ ரூபங்கள், தன்னை அண்டிய அடியார்களுக்காக, ஸாத்வத ஸம்ஹிதை கூறுவது போன்று – பிம்பாக்ருத்யாத்மநா

பிம்பே ஸமாகத்யாவதிஷ்டதே – பிம்பத்தில் எழுந்தருளி பிம்பம்–திருமேனி எனப் பிரிக்க இயலாதபடி – விக்ரஹமாக உள்ளன. இவை அர்ச்சாவதாரமாகும்.

ஸர்வருடையவும் ஹ்ருதயங்களிலே ஸௌக்ஷ்மமாயிருப்பதொரு ரூபவிசேஷத்தைக் கொண்டு நிற்கிற நிலை அந்தர்யாம்யவதாரம். இது ஸர்வாந்தர்யாமியான திவ்யாத்மஸ்வரூபத்தை அனுஸந்திக்க இழிவார்க்குத் துறையாக

> அஷ்டாங்க யோக ஸித்தாநாம் ஹ்ருத்யாக நிரதாத்மநாம்
> யோகிநாமதிகாரஸ்ஸ்யாத் ஏகஸ்மிந் ஹ்ருதயேசயே

இத்யாதிகளிலே சொல்லுகையாலே அந்தர்யாமிரூபமென்று சொல்லப்பட்டது.

விளக்கம் – ஜீவன்களின் இதயத்திலே ஸௌக்ஷ்ம ரூபத்தில் ஈச்வரன் உள்ளான். இது அந்தர்யாமி ரூபமாகும். இந்த நிலையானது அந்தர்யாமியாக, ஸர்வேச்வரனின் திவ்ய மங்கள ரூபத்தைத் த்யானிக்க முயல்பவர்களுக்கு உரியதாகும். இதனை ஸாத்வத ஸம்ஹிதை – அஷ்டாங்க யோக ஸித்தாநாம் ஹ்ருத்யாக நிரதாத்மநாம் யோகிநாமதிகாரஸ்ஸ்யாத் ஏகஸ்மிந் ஹ்ருதயேசயே – அஷ்டாங்க யோகத்தை அடைந்து, தங்கள் இதயத்தில் அந்தர்யாமியாக உள்ள ஸர்வேச்வரனைத் த்யானிக்க முயலும் யோகிகள் அந்தர்யாமியாக உள்ள அந்த ரூபத்தை உபாஸிக்கும் தகுதி பெற்றவர்கள் – என்றது. இப்படியாக அந்தர்யாமி ரூபம் கூறப்பட்டது.

இப்படி அவதரிக்கிற ரூபங்களில் வகைகளெல்லாம் சுத்தஸத்வ த்ரவ்யமயங்களாய் கர்மதத்பலங்களோடு துவக்கற வருகையாலே சுத்தஸ்ருஷ்டியென்று பேர்பெற்றிருக்கும்.

விளக்கம் – இவ்விதமாக எம்பெருமான் அவதாரம் செய்யும் ரூபங்கள் அனைத்தும் சுத்தஸத்வங்கள் ஆகும். இவை கர்மத்துடனோ அல்லது கர்ம பலன்களுடனோ ஸம்பந்தம் பெற்றவை அல்ல. எனவே இவை சுத்த ஸ்ருஷ்டி எனப்படும்.

இவ்வதாரங்களெல்லாம் ஸத்யங்களென்றும், இவற்றில் ஈச்வரனுக்கு ஞானாதி ஸங்கோசமில்லையென்றும், இவ்விக்ரஹங்கள் சுத்தஸத்த்வமயங்களென்றும், இவற்றிற்கு ஈச்வரேச்சாமாத்ரமே காரணமென்றும், தர்மரக்ஷணம் பண்ண வேண்டும் காலமே காலமென்றும், ஸாதுபரித்ராணாதிகளே ப்ரயோஜனங்களென்றும், இவ்வர்த்தம் தெளிந்து அனுஸந்திப்பார்க்கு ஏகஜன்மத்திலே ஸ்வாதிகாரானுகுண ஸமீஹிதோபாயபூர்த்தியாலே ஜன்மாந்தரம் அனுபவியாதே முக்தராகலாமென்றும், பஹூநி மே வ்யதீதாநி என்று தொடங்கி ஐந்து ச்லோகத்தாலே கீதாசார்யன் அருளிச் செய்தான். இது ஸ்வதந்த்ர ப்ரபத்தி நிஷ்டனுக்கு சரண்யகுணாவிசேஷ ஞானமுகத்தாலே உபாயானுஷ்டானக்ஷணத்திலே மஹாவிச்வாஸாதிகளை ஸ்திரீகரித்து உபகாரகமாம்.

விளக்கம் – இந்த அவதாரங்கள் அனைத்தும் உண்மையானவை, இவற்றில் ஈச்வரனுக்கே உரித்தான ஞானம் மற்றும் உள்ள குணங்களுக்குக் குறைவில்லை, இந்த அவதாரங்கள் அனைத்தும் சுத்தஸத்வ விக்ரஹங்கள், இந்த அவதாரங்களுக்குக் காரணம் ஈச்வரனின் விருப்பம் மட்டுமே, இவை எப்போது வெளிப்படும் என்றால் தர்மத்தை நிலை நிறுத்த வேண்டிய காலங்களில் மட்டுமே, இவற்றின் நோக்கம் ஸாதுக்களைக் காப்பதே – இந்த அவதாரங்களைக் குறித்து இப்படியாக உள்ள உண்மைகளை ஒரு சிலர் புரிந்து கொள்ளலாம். அவர்கள் இந்தப் பிறப்பிலேயே மோக்ஷம் பெற்று விடுகின்றனர், அவர்களுக்கு மேலும் பிறவிகள் இல்லை, இவர்கள் தங்கள் அதிகாரம், தகுதிகளுக்கு ஏற்ப அனைத்தையும் பெறுகின்றனர். இவை அனைத்தையும் கண்ணன் ஸ்ரீமத் பகவத் கீதையில் – பஹூநீ மே வ்யதீதாநி (4–5) – என்ற ச்லோகம் தொடங்கி அருளிச் செய்தான். விபவ அவதாரங்கள் குறித்த த்யானம் மூலமாகக் கிட்டுவது என்ன? மோக்ஷத்தில் விருப்பம் கொள்ளும் ஒருவனுக்கு, தன்னை மோக்ஷத்திற்கு இட்டுச் செல்லும் உபாயம் ப்ரபத்தி மட்டுமே என்று அறியும் ஒருவனுக்கு – இத்தகைய விபவ அவதார த்யானம் என்பது எந்த ஒரு பரம்பொருளை சரணம் என்று புகுந்து விடுகிறானோ, அந்தப் பரம்பொருளின் குணங்கள் குறித்த ஞானத்தை உண்டாக்கிவிடுகிறது. இதன் மூலம் அவனுக்கு மஹாவிச்வாசம் உண்டாகிவிடுகிறது.

## அர்ச்சாவதாரம் மோக்ஷம் அளிக்கவல்லது

இப்படியே அர்ச்சாவதாரமும் மிறுக்கிற மோக்ஷத்தைத் தருமென்னுமிடத்தை

ஸௌரூபாம் ப்ரதிமாம் விஷ்ணோ: ப்ரஸந்ந வதநேக்ஷணாம்
க்ருத்வா ஆத்மந: ப்ரீதிகரீர் ஸௌவர்ண ரஜதாதிபி:
தாமர்சயேத்தாம் ப்ரணமேத்தாம் யஜேத்தாம் விசிந்தயேத்
விசத்யபாஸ்ததோஷஸ்து தாமேவ ப்ரஹ்மரூபிணீம்

என்று ஸ்ரீசௌநகபகவான் அருளிச் செய்தான். ஆழ்வார்களுக்கும் இவ்வவதார ரஹஸ்யத்தையும், அர்ச்சாவதார வைலக்ஷண்யத்தையும் ப்ரசுரமாக அனுஸந்தித்து, இதற்குப் பேரணியாக பரத்வத்தைக் கண்டு போந்தார்கள்.

விளக்கம் – இது போன்றே அர்ச்சாவதாரமும் எந்தவிதமான சிரமமும் இன்றி மோக்ஷம் அளிக்கவல்லதே ஆகும். இதனைச் சௌநக பகவான் விஷ்ணு தர்மத்தில் (103-16) கீழே உள்ளது போன்று அருளிச்செய்தார்.

ஸௌரூபாம் ப்ரதிமாம் விஷ்ணோ: ப்ரஸந்ந வதநேக்ஷணாம்
க்ருத்வா ஆத்மந: ப்ரீதிகரீர் ஸௌவர்ண ரஜதாதிபி:
தாமர்சயேத்தாம் ப்ரணமேத்தாம் யஜேத்தாம் விசிந்தயேத்
விசத்யபாஸ்ததோஷஸ்து தாமேவ ப்ரஹ்மரூபிணீம்

இதன் பொருள் – தங்கம், வெள்ளி முதலானவற்றைக் கொண்டு, அழகான உருவம் கொண்டதாக, தெளிவான திருமுகம் மற்றும் கண்கள் கொண்டதாக, காண்பவர்களுக்கு இன்பத்தை அளிக்கவல்லதாக உள்ள விஷ்ணு பிம்பத்தை வடித்து, அதனை அர்ச்சனை செய்து வணங்கவேண்டும், இபடியாக த்யானிப்பதன் மூலம், தன்னுடைய தோஷங்கள் அனைத்தும் கழியப்பெற்று, ப்ரஹ்ம ரூபமான அந்த விக்ரஹத்தையே அடைந்துவிடுகிறான் – என்பதாகும்.

இப்படியாக உள்ள அர்ச்சாவதார ரஹஸ்யத்திலும், இதில் உள்ள மேன்மைகளையும் உணர்ந்த ஆழ்வார்கள், அர்ச்சாவதாரத்திலேயே மூழ்கினர். இவற்றின் மூலாதாரமாக பரம்பொருளையே கண்டனர்.

## ஈச்வரனின் ப்ரவ்ருத்திகள்

இப்படியிருக்கிற ஈச்வரன் தன் ஆனந்தத்துக்குப் பரீவாஹமாகப் பண்ணும் வ்யாபாரங்கள் ஸகலஜகத்ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார மோக்ஷப்ரதத்வாதிகள்.

விளக்கம் – மோக்ஷத்தை அளிக்கவல்ல ஈச்வரனின் செயல்பாடுகள் என்பது அனைத்து உலகங்களையும் படைத்து, காத்து, ஸம்ஹாரம் செய்வது ஆகும். இதனை அவன் தன்னுடைய ஆனந்தம் காரணமாகவே செய்கிறான்.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

.........தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# முமுக்ஷுப்படி

## ஸ்ரீ மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 13)

71. மணத்தையும், ஒளியையுங்கொண்டு, பூவையும், ரத்நத்தையும் விரும்புமாபோலே, சேஷமென்று ஆத்மாவை ஆதரிக்கிறது அல்லாதபோது உயிரினாற்குறைவிலம் என்கிறபடியே த்யாஜ்யம், அது தோன்ற சேஷத்வத்தைச் சொல்லிப் பின்னை ஆத்மாவைச் சொல்லுலொறது.

அவதாரிகை – தர்மிஸ்வரூபகதந பூர்வகமாக தத்தர்மமான சேஷத்வத்தைச் சொல்லுகை ப்ராப்தமாயிருக்க, இப்ரணவங் தன்னிலே ப்ரதமம் சேஷத்வத்தைச் சொல்லி, பின்னை ஆத்மாவைச் சொல்லுவானென்? என்கிற சங்கையிலே. அப்படி சொல்லுகைக்கு ஹேதுவை அருளிச்செய்கிறார் மணத்தையும் இத்யாதி வாக்யத்ரயத்தாலே.

விளக்கம் – ஒரு பொருளைப் பற்றி முதலில் கூறிவிட்டு, அதன் பின்னர் அந்தப் பொருளின் தன்மைகளைக் கூறுவதே முறையாகும். இங்கு ஆத்மாவின் தன்மையான சேஷத்வத்தை முதலில் கூறி, அதன் பின்னர் அந்த சேஷத்வம் உடைய ஆத்மாவைப் பற்றிக் கூறுகிறார். இவ்விதம் வரிசை மாற்றி ஏன் கூறவேண்டும்? இந்தச் சந்தேகத்தை முன்னிட்டு இதற்கான காரணத்தை விளக்குகிறார்.

வ்யாக்யானம் – அதாவது, மணத்துக்கு ஆச்ரயமென்று பூவை விரும்புமாபோலேயும், ஒளிக்கு ஆச்ரயமென்று ரத்நத்தை விரும்புமாபோலேயும், சேஷத்வத்துக்கு ஆச்ரயமென்றாயிற்று ஆத்மாவை ஆதரிக்கிறது, சேஷத்வாச்ரயமல்லாதபோது, உயிரினாற் குறைவிலம் என்று பகவச்சேஷத்வ ரஹிதமான ஆத்மாவால் அபேக்ஷையுடையோமல்லோம் என்கிறபடியே த்யாஜ்யனாய் விடுமித்தனை. இப்படியிருந்துள்ள சேஷத்வத்தின் ஊற்றந்தோற்ற, சேஷத்வத்தை முந்துறச் சொல்லி, பின்னை ஆத்மாவைச் சொல்லிற்று – என்கை.

விளக்கம் – நறுமணம் கொண்டது என்று மலரை விரும்புவது போன்றும், ஒளியை உடையது என்று இரத்தினத்தை விரும்புவது போன்றும் – சேஷத்வம் உள்ளது என்ற காரணத்தினால்தான் ஆத்மாவைப் பற்றி அறிய விரும்புகின்றனர். ஆத்மாவிற்கு சேஷத்வம் இல்லை என்றால், நம்மாழ்வார் திருவாய்மொழியில் கூறியது போன்று (4–8–10) – உயிரினாற் குறைவிலம் – எம்பெருமானுக்கு அடிமையாக இல்லாத ஆத்மா அவசியம் இல்லை – என்பது போன்று அடிமைத்தனம் இல்லாத ஆத்மா கைவிடப்படவேண்டியதாகும். இப்படியாக அடிமைத்தனத்தின் முக்கியத்வத்தை வெளிப்படுத்துவதற்காகவே சேஷத்வம் முதலில் கூறப்பட்டு, பின்னர் ஆத்மா கூறப்பட்டது.

72. ஆக, ப்ரணவத்தால் கண்ணபுரமொன்றுடையானுக்கு அடியேன் ஒருவர்க்குரியேனோ என்கிறபடியே ஜீவபரஸம்பந்தஞ் சொல்லிற்று.

அவதாரிகை – பதத்ரயாத்மகமான இப்ரணவத்தாற் சொல்லித் தலைக்கட்டின அர்த்தத்தை அருளிச்செய்கிறார், ஆக என்று தொடங்கி.

விளக்கம் – மூன்று எழுத்துக்களால் ஆன ப்ரணவத்திற்கு என்ன பொருள் என்று இதுவரை கூறி முடித்ததை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது கீழ்ச்சொன்ன எல்லாவற்றாலும், ப்ரணவத்தால் கண்ணபுரமொன்றுடையானுக்கு என்று சதுர்த்யந்தமான அகாரார்த்தத்தையும், அடியேன் என்று சேஷத்வாச்ரயவாசியான மகாரத்தில் அர்த்தத்தையும், ஒருவர்க்குரியேனோ என்று அந்யசேஷத்வ நிவர்த்தகமான உகாரார்த்தத்தையும் சொல்லாநின்று கொண்டு ப்ரணவார்த்தத்தை அனுஸந்தித்த திருமங்கையாழ்வார் ஸ்ரீஸூக்திப்படியே, ஜீவபரர்களுக்கு உண்டான சேஷசேஷிபாவ ஸம்பந்தத்தைச் சொல்லிற்று – என்கை.

விளக்கம் – இதுவரை கூறப்பட்ட ப்ரணவத்தின் பல அக்ஷரங்களின் அர்த்தம் மூலமாகக் கிடைத்த பொருளை, திருமங்கையாழ்வார் தனது பெரிய திருமொழியில் (8-9-3) – கண்ணபுரம் ஒன்றுடையானுக்கு அடியேன் ஒருவர்க்கு உரியேனோ – என்றார். இதில் கண்ணபுரம் ஒன்றுடையானுக்கு என்பதம் மூலம், நான்காம் வேற்றுமையை இறுதியில் கொண்ட அ என்ற எழுத்தின் பொருளையும், அடியேன் என்பதன் மூலம் சேஷத்வத்தை இலக்கணமாக உடைய ஜீவனைக் கூறும் ம என்ற எழுத்தையும், ஒருவர்க்கு உரியேனோ என்பதன் மூலம் மற்றவர்களுக்கு அடிமைப்படுவதை நீக்குகின்ற உ என்ற எழுத்தின் பொருளையும் உணர்த்தினார். இப்படியாக ப்ரணவத்தின் பொருளை உணர்த்திய திருமங்கையாழ்வாரின் ஸ்ரீஸூக்திகளுக்கு ஏற்ப ஜீவன்-எம்பெருமான் ஆகியவர்களுக்கு இடையில் உள்ள சேஷ-சேஷி (அடிமை-எஜமான) ஸம்பந்தம் கூறப்பட்டது.

73. இத்தால் தாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு என்றதாயிற்று.

அவதாரிகை – இன்னமும் பொய்கையாருடைய திவ்யஸூக்தியாலே சேஷத்வ ப்ரதிஸம்பந்தி ஒரு மிதுநம் என்னுமிடந்தோற்ற இந்த ஜீவபரஸம்பந்தத்தை அருளிச்செய்கிறார் இத்தால் தாமரையாள் கேள்வன் என்று தொடங்கி.

விளக்கம் – அடுத்து பொய்கை ஆழ்வாரின் ஸ்ரீஸூக்தியில், ஜீவன் பெரியபிராட்டியாருடன் கூடிய எம்பெருமானுக்கு அடிமையானவன் என்பதன் மூலம், ஜீவன்-பரமாத்மா சம்பந்தத்தை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, இப்ரணவத்தால், தாமரையாள் கேள்வன் என்று அகாரவாச்யனாய் சேஷத்வப்ரதிஸம்பந்தியான ஸ்ரீய:பதியையும், ஒருவனையே நோக்கும் என்று சதுர்த்யுகாரங்களாற் சொல்லுகிற அநந்யார்ஹசேஷத்வ ப்ரயுக்தமான ஆத்மாவினுடைய ததேகபரதையையும், உணர்வு என்று அந்த சேஷத்வ ஆச்ரயமாகமகாரத்தாற் சொல்லப்பட்ட ஜ்ஞாநைக நிரூபணீயனான ஆத்மாவையும் சொல்லுகிற ஸூக்தியிற்படியே, ஜீவபரஸம்பந்தம் சொல்லிற்றாயிற்று – என்கை.

விளக்கம் – இந்தப் ப்ரணவத்தால் கூறப்பட்ட பொருளை பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதி (61) – தாமரையாள் கேள்வன் – என்பதன் மூலம் அருளிச்செய்தார். இதில் தாமரையாள் கேள்வன் என்ற பதங்கள் அடிமைத்தனத்தை ஏற்றுக்கொள்பவனும், அ என்னும் எழுத்தின் மூலம் விளக்கப்படுபவனும் ஆகிய பெரியபிராட்டியின் நாதனை குறிக்கும். ஒருவனையே நோக்கும் – என்ற பதங்கள் மூலம் நான்காம் வேற்றுமையாலும், உ என்ற எழுத்தின் மூலமும் கூறப்படும் மற்ற யாருக்கும் ஆத்மா அடிமையல்லன் என்பது கூறப்பட்டது. உணர்வு என்ற பதம் இப்படியாக சேஷத்வத்துடன் கூடியவனும், ம என்ற எழுத்தால் கூறப்பட்டவனும், அறிவைக் கொண்டு மட்டுமே நிரூபிக்க வேண்டுபவனாய் உள்ளவனும் ஆகிய ஆத்மா கூறப்பட்டான். இப்படியாக இந்தப் பாசுரம் மூலம் ஜீவ-பரமாத்மா ஸம்பந்தம் விளக்கப்பட்டது.

74. அகாரத்தாலும், மகாரத்தாலும், ரக்ஷகனையும், ரக்ஷ்யத்தையும் சொல்லிற்று, சதுர்த்தியாலும், உகாரத்தாலும் ரக்ஷணஹேதுவான ப்ராப்தியையும் பலத்தையும் சொல்லிற்று.

அவதாரிகை – அகாரத்தில் ப்ரத்யயார்த்த ப்ரதாநமாக ப்ரணவார்த்தத்தை யோஜித்தார் கீழ், அதில் தாத்வர்த்தப்ரதாநமாக ப்ரணவத்துக்கு இன்னமும் ஒரு யோஜனை அருளிச்செய்கிறார், அகாரத்தாலும் என்று தொடங்கி.

விளக்கம் – இதுவரை அ எழுத்தில் மறைந்துள்ள சேஷ–சேஷி ஸம்பந்தம் மூலமாக ப்ரணவத்தின் பொருளை விளக்கினார். இனி வேறு வகையில் ப்ரணவத்தின் பொருளை உணர்த்த உள்ளார்.

வ்யாக்யானம் – அதாவது, அகாரத்தாலே ரக்ஷகனான ஈச்வரனைச் சொல்லிற்று, மகாரத்தாலே தத்ரக்ஷ்யமான ஆத்மவஸ்துவைச் சொல்லிற்று, சதுர்த்தியாலே ரக்ஷிக்கைக்கு ஹேதுவான சேஷத்வமாகிற ப்ராப்தியைச் சொல்லிற்று, இப்படி ரக்ஷிக்கிறதற்குப் பலம் – இவ்வாத்மவஸ்து அத்தலைக்கு அநந்யார்ஹமாக விநியோகப்படுகையாகையாலே. அநந்யார்ஹசேஷத்வ வாசியான உகாரத்தாலே ரக்ஷணபலத்தைச் சொல்லிற்று – என்கை.

விளக்கம் – அ என்ற பதம் மூலம் ரக்ஷகனான ஈச்வரன் கூறப்பட்டான். ம என்ற எழுத்து மூலம் அவனால் ரக்ஷிக்கப்படும் ஆத்மா கூறப்பட்டான். நான்காம் வேற்றுமையால் எம்பெருமாள் ஜீவனை ரக்ஷிக்கக் காரணமாகிய ஜீவனுடைய அடிமைத்தனம் கூறப்பட்டது. இப்படி எம்பெருமான் ரக்ஷிப்பதற்குக் காரணம் என்னவெனில் – ஜீவன் எம்பெருமானைத் தவிர வேறு யாருக்கும் அடிமை அல்லன் என்பதனால் ஆகும். இத்தகைய ரக்ஷண பலம் என்பது உ என்ற எழுத்தால் கூறப்பட்டது.

75. இனிமேல் ப்ரணவத்தை விவரிக்கிறது.

அவதாரிகை – ஆக இம்மந்த்ரத்திற் ப்ரதமபதமான ப்ரணவார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று. இனி மேலிற்பதங்களுக்கு அர்த்தம் அருளிச்செய்வதாக மந்த்ரசேஷமும் இதுக்கு விவரணமாயிருக்கும்படியை முந்துற அருளிச்செய்கிறார், இனிமேல் ப்ரணவத்தை விவரிக்கிறது என்று.

விளக்கம் – இப்படியாகத் திருமந்திரத்தின் முதல் பதமான ப்ரணவம் விளக்கப்பட்டது. இனி அடுத்த இரண்டு பதங்களுக்கு (நமோ, நாராயணா) விளக்கம் அருளிச்செய்ய தொடங்கி, அந்த இரண்டு பதங்களும் ப்ரணவத்தை விளக்குவதாகவே உள்ளன என்று அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – இவ்விடத்தில் விவரணமாகிறது, ப்ரஸ்துதமான அர்த்தத்துக்கு உபயுக்தமான அர்த்தத்தைச் சொல்லிக் கொண்டு பூர்வோக்தமான அர்த்தத்தை விசதீகரிக்கை என்று தீபப்ரகாசத்திலும், உக்தார்தத விசதீகாரயுக்தார்த்தாந்தர போதநம் மதம் விவரணம் தத்ர மஹிதாநாம் மநீஷிணாம் என்று ரஹஸ்யத்ரயார்த்த விவரணக்ரமம் அருளிச்செய்த ப்ரபந்தத்திலும் விவரண லக்ஷணத்தை ஜீயருளிச்செய்தாரிறே.

விளக்கம் – விவரணம் என்றால் கூறப்படும் அர்த்தத்திற்கு சரியான விளக்கம் கூறி, அதில் கூறப்பட்ட அர்த்தத்தை தெளிவுபடுத்துதல் ஆகும். இந்த விஷயத்தை வாதிகேஸரி ஜீயர் தனது தீபப்ரகாசத்தில் – உக்தார்தத விசதீகாரயுக்தார்த்தாந்தர போதநம் மதம் விவரணம் தத்ர மஹிதாநாம் மநீஷிணாம் – கூறப்படும் பொருளை நன்கு தெளிவுபடுத்தி, தகுந்த அர்த்தத்தை உணர்த்துவதே வ்யாக்யானம் எனப்படும் என்பது பெரியவர்களின் கருத்து – என்று ரஹஸ்யத்ரய விவரணத்திலும் அருளிச் செய்தார் அன்றோ?

ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த

# சிறிய திருமடல்

## (பகுதி – 13)

(பேராயிரமுடையான்) – இப்படி ஆஸ்ரீத ரக்ஷணத்துக்காகச் செய்த அபதாநங்களுக்கு வாசகமான திருநாமங்கள் எண்ணிறந்தவற்றை உடையவன். ஆஸ்ரீதர் இவ்விஷயத்தில் இழிகைக்குப் பல துறையுண்டானாற்போலே, அவர்களது ஸந்திக்கைக்கும் பல திருநாமங்களையுடையவன்.

விளக்கம் – (பேர் ஆயிரம் உடையான்) – இப்படியாகத் தனது அடியார்களைக் காப்பதற்காக செய்த எண்ணற்ற செயல்களை விளக்கவல்ல, எண்ணற்ற திருநாமங்கள் கொண்டவன். இவனைப் பற்றி இவனது அடியார்கள் ஈடுபடுவதற்கு எண்ணற்ற தன்மைகள் உள்ளது போன்று, அவர்கள் கூறி மகிழ பல திருநாமங்கள் கொண்டவன்.

(பேய்ப்பெண்டீர்) – ஸர்வேச்வரனடியாக வந்தது இந்நோய் என்றாலும், தேவதாந்தரஸ்பர்சமுண்டு என்று அதிசங்கை பண்ணுகிற அறிவு கேடிகளிறே நீங்கள். (நும் மகளை) – உங்கள் வயிற்றிலே பிறந்தவளை. உங்கள் வயிற்றில் பிறந்தவள் பரதேவதைக்கு நோவு படுமித்தனையல்லது அவர தேவதைக்கு நோவுபடுமோ? (தீரா நோய் செய்தானெனவுரைத்தாள்) – இந்நோய் தீரும்படியென்னென்று விசாரிக்கிறவர்களுக்கிறே தீரா நோய் செய்தான என்கிறது. இவளுக்கு ஸர்வேச்வரனடியாக வந்த நோயாகிறது தீரிற்செய்வதென் என்று அவர்கள் பயப்படுகிறார்களாகக் கருதி தீரா நோய் என்கிறாள் காணும். இப்போது தீராநோய் என்கிறது பக்தியையிறே. யாவதாத்மபாவியான நோயிறே. ப்ராப்திதசையிலும் அநுவர்த்திக்குமிறே.

விளக்கம் – (பேய் பெண்டீர்) – இவளுக்கு வந்துள்ள இந்த நோய் எம்பெருமானை இவள் பெறாமல் உள்ளதாலேயே ஆகும். ஆனால் நீங்களோ உங்கள் அறிவிழந்து, இவளுக்கு மற்ற தேவதைகளின் தீண்டுதலால் இந்த நோய் வந்ததோ என்று சந்தேகம் கொள்கிறீர்கள். (நும் மகளை) – உங்கள் வயிற்றில் பிறந்த இவள் பரம்பொருளுக்காக ஏங்குவாளே அல்லாமல் மற்ற தேவதைகளுக்காக ஏங்குவாளோ? (தீரா நோய் செய்தான் என உரைத்தாள்) – கட்டுவிச்சியிடம் அங்கு உள்ள மற்றவர்கள், இந்த நோய் எவ்விதம் தீரும் என்று விசாரித்தனர். அதற்குக் கட்டுவிச்சி, நீங்காத நோய் அல்லவா எம்பெருமான் கொடுத்துவிட்டான், என்றாள். அதற்கு அவர்கள், ஸர்வேச்வரன் மூலமாக வந்த இந்த நோய் மறைந்தால் என்ன செய்வது, என்று அச்சத்துடன் கேட்டனர். அதற்குக் கட்டுவிச்சி அவர்களிடம், இது தீராத நோய் என்றும், ஆத்மா உள்ளவரை, பரமபதத்தை அடைந்த பின்னரும் இந்த நோய் தொடரும், என்றாள்.

(எனவுரைத்தாள்) – தென்றலும் சிறுதுளியும் பட்டாற்போலே இருக்கிறது காணும் தனக்கினிதானபடி. (உரைத்தாள்) – என்றும் இந்நோய் கொண்டாலாகாதோ இவள் புகுந்து இப்படி பரிஹாரஞ் சொல்லப் பெறில்?

விளக்கம் – (என உரைத்தாள்) – கட்டுவிச்சியின் இந்தச் சொற்கள் நாயகிக்கு தென்றல் போலவும், தென்றலில் கலந்து வரும் மழைத்துளி போன்றும் இனிதாக உள்ளான. (உரைத்தாள்) – இவ்விதம் கட்டுவிச்சியின் இனிமையான சொற்களைக் கேட்பதற்கு வாய்ப்பு அளிக்கும் என்பதற்காக இந்த நோய் ஏற்படுவதில் தவறில்லை என்று நாயகி நினைத்தாள்.

கட்டுவிச்சி அப்படி சொன்னாளாகில், உங்கள் தாய்மார் செய்ததென்னென்னச் சொல்லுகிறாள் மேல். (சிக்கென மற்றாரானுமல்லாமை கேட்டெங்களம்மனையும்) – இந்த நோவு பேராயிரமுடையானடியாக வந்தது என்று சொன்னாள் கட்டுவிச்சி. என்னைப் பெற்ற தாயாரும், தேவதாந்தர ஸ்பர்சமில்லையிறே என்று பலகாலுங்கேட்டு. (போரார் வேல்கண்ணீர் அவனாகில் பூந்துழாய் தாராதொழியுமே) – பெண் பிள்ளைகள் பதறுகிற பதற்றத்தைக் கண்டு – நோவுக்கு நிதானம் ஸர்வேச்வரனானபின்பு, நீங்கள் இப்படி பதறவேணுமோ? புவனியெல்லாம் நீரேற்றளந்த நெடியபிரான் அருளாவிடுமே என்னுமாபோலே அவனாகையும் நம்முடைய அபேக்ஷிதம் செய்யானென்கையும் அக்நிநா ஸிஞ்சேத் போலே அஸங்கதமன்றோ? ராமோ த்விர்நாபிபாஷதே இதிவத். (தன்னடிச்சியல்லளே) – அபேக்ஷிதமானவை தானாகச் செய்யாதொழிந்தாலும் காலைக்கட்டியாகிலும் செய்வித்துக்கொள்ள ப்ராப்தியில்லையோ? என்று இப்படி தோழிமார்க்குச் சொல்லி. (மற்றாரானுமல்லனே யென்று) – தேவதாந்தரமான நாய் தீண்டிற்றில்லையிறே என்று தானே தெளிந்து நிர்ப்பரையானாள். எம்பெருமானோடே ஸம்பந்தமுடைய இவளுக்கு நான் கரைய வேணுமோ? என்று தளப்பமற்றாள். என்று அவள் செய்ததென்? என்னில், (ஒழிந்தாள்) – ஒழிந்தாள்.

விளக்கம் – கட்டுவிச்சி இவ்விதம் சொன்னதைக் கேட்டு உனது தாய்மார்கள் என்ன செய்தனர் என்று நாயகியிடம் கேட்க, அவள் கூறத் தொடங்கினாள். (சிக்கென மற்று ஆரானும் அல்லாமை கேட்டு எங்கள் அம்மனையும்) – இந்த நோயானது ஆயிரம் திருநாமங்களுடைய எம்பெருமானால் வந்தது என்று கட்டுவிச்சி கூறினாள். இதனைக் கேட்ட எனது தாயார் அவளிடம் என்னை வேறு ஒரு தெய்வமும் பீடிக்கவில்லையே என்று பலமுறை கேட்டு சமாதானம் அடைந்தாள். (போரார் வேல் கண்ணீர் அவனாகில் பூந்துழாய் தாராது ஒழியுமே) – தன் அருகில் உள்ள தன் மகளின் மற்ற தோழிகளின் பதற்றம் கண்டு அவர்களிடம் எனது தாய், இவளது இந்த நோய்க்குக் காரணம் ஸர்வேச்வரனே என்று அறிந்த பின் ஏன் இந்தப் பதற்றம்? திருவிருத்தத்தில் (69) கூறுவது போல – புவனியெல்லாம் நீரேற்ற அளந்த நெடியபிரான் அருளாவிடுமே – இவளை அவனே வந்து பற்றி உள்ளதால், இவளது விருப்பத்தை அவன் செய்யமாட்டான் என்று கூறுவது முரண்பாடு அல்லவா? நீங்கள் இவ்விதம் பதறுவது – அக்நிநா ஸிஞ்சேத் – நெருப்பால் நனைக்க வேண்டும் – என்று கூறுவது போல் முரணாக உள்ளதே. இராமன் – இராமோ த்விர் ந அபி பாஷதே – இருவகையாகப் பேசமாட்டான் – என்று அவனே கூறினான் அல்லவா? (தன் அடிச்சி அல்லளே) – இப்படியாக இவள் கேட்டதை அவன் அளிக்கவில்லை என்றாலும், அவனது திருவடியைக் கட்டி அணைத்து நிறைவேற்றிக் கொள்ளும் உறவு இவளுக்கு உள்ளது அல்லவா? என்று மகளின் தோழிகளிடம் கூறினாள். மற்ற தெய்வங்கள் என்று எந்த நாயும் தனது மகளைத் தீண்டவில்லை என்று மனம் தெளிவு அடைந்து, சமாதானம் ஆனாள். எம்பெருமானுடன் தொடர்பு உடைய இவளுக்காக நான் வருந்த வேண்டிய அவசியம் இல்லை என்று மனவுறுதி குலையாமல் நின்றாள். இப்படியாகச் சொல்லி அவள் செய்தது என்னவென்றால், தனது மகளைப் பற்றிய கவலையை ஒழித்தாள்.

(நான்) – என் பந்தாடலிலே அவனைக் கையும் மடலுமாகக் காணக்கடவதாக உத்யோகித்துப் புறப்பட்டு, அவன் குடக் கூத்திலே தோற்ற நான். (அவனை) – தன் வடிவழகைக்காட்டி என்னை அநந்யார்ஹையாக்கினவனை. (காரார் திருமேனி கண்டதுவே காரணமாக) – அவனுடைய ச்ரமஹரமான திருமேனியைக் கண்டதுவே ஹேதுவாக. ரிஷிகளையும் ஆழ்வார்களையும் போலேயாயிற்று திருத்தாயாரும் இவளும், அவன் ஸ்வரூபகுண ஞானமாயிற்று ரிஷிகளுக்கு, திவ்யவிக்ரஹத்திலும் விக்ரஹகுணத்திலுமாயிற்று ஆழ்வார்களுக்கு. குணஞானத்தில் அகப்பட்டார்க்கு ஆற்றலாமிறே. வடிவழகில் அகப்பட்டார்க்கு ஆற்றவொண்ணாதிறே. அப்படி குணஜ்ஞானமுடையவளாயிற்று திருத்தாயார், ஆகையாலே தரித்திருந்தாள், அவ்வடிவழகிலே அகப்பட்டவர்களுக்குப் பெற்றல்லது தரிக்கவெண்ணாதிறே. (போரா) – ஆண் பெண்ணானபடி. (பதற்றா) – பெண்ணான தன்மையைத்தானும் இழந்தபடி. (திரிதருவன் பின்னையும்) – பின்னையும் அடக்கம் குடிபோனால் நசிக்கவிறேகண்டது, அப்படிச்செய்யாதே யாதநாசரீரம் போலே பின்னையுந்திரிந்தேன். (ஈராப்புகுதலும்) – புகுந்த ஈருகிறதில்லை, ஈர்ந்துகொண்டு புகுராநின்றது. (இவ்வுடலை) – பண்டே தொட்டார்மேலே தோஷமாம்படி விரஹக்ருசமான உடலையென்னுதல், பிரிவுக்குச் சிளையாத உடம்பென்னுதல். (தண்வாடை) – நஞ்சூட்டின ஆயுதம் போலே குளிர்த்தியையுடைத்தான வாடை. (சோரா மறுக்கும்) – சோரவும் பண்ணாநின்றது. மறுக்கவும் பண்ணா நின்றது.

(வகையறியேன்) – திரள சோரப்பண்ணா நின்றதென்று சொல்லுமித்தனையொழிய செய்கிற வகைகள் பேச்சுக்கு நிலமல்ல.

விளக்கம் – (நான்) – எனது பந்தாட்டம் மூலம் அவனை மயங்க வைத்து, அவன் மடலும் கையுமாக என் அருகில் வரும்படிச் செய்வேன் என நான் புறப்பட்டேன். ஆனால் அவனது குடக்கூத்து கண்டு நான் தோற்றேன். (அவனை) – தனது திருமேனியின் அழகைக் காட்டி, அவனைத் தவிர மற்ற எந்த நினைவும் எனக்கு வராதபடி செய்த அவனை. (காரார் திருமேனி கண்டதுவே காரணமா) – காண்பவர்களின் களைப்பை நீக்கவல்ல திருமேனியை இவள் கண்டதே காரணமாக. அவனது ஸ்வரூபம் மற்றும் குணங்களின் ஈடுபட்ட முனிவர்கள் போன்று இவளது தாய் இருந்தாள். இவனது திவ்ய விக்ரஹத்திலும், அந்த விக்ரஹத்தின் குணங்களிலும் ஈடுபட்டதால் இவளது தாயார் தப்பிவிட்டாள். ஆனால் இவனது திருமேனியின் அழகில் ஈடுபட்டதால், அதனைப் பெறாமல் தாங்க இயலாது அல்லவா? (பேரா) – திருமங்கை மன்னன் என்னும் ஆண், பரகால நாயகி என்ற பெண்ணாக மாறியபடி. (பிதற்றா) – பெண்மைக்கு உரிய தன்மைகளை இழந்தபடி. (திரிதருவன் பின்னையும்) – பெண் என்பவள் தனது அடக்கத்தை இழந்து பின் உயிரை விடுவதே சிறந்தது, ஆனால் அப்படியும் நான் செய்யாமல், நரகத்திற்குள் புகுவதற்காக யாதனாசரீரம் என்னும் ஒரு வகையான உடலை எடுப்பது போன்று, இந்த உடலுடன் திரிந்தேன். (ஈராப்புகுதலும்) – தென்றல் காற்றாவது உள்ளே புகுந்து உடலைப் பிளக்காமல், உடலைப் பிளந்து உள்ளே புகுந்து. (இவ்வுடலை) – விரகத்தின் காரணமாக மெலிந்த உடலானது, யாராவது தொட்டாலே அவர்கள் மீது கொலைப்பழி விழும்படி, உயிர் போகும் நிலையில் உள்ள உடலை. (தண் வாடை) – விஷம் தடவப்பட்ட ஆயுதம் போன்று, குளிர்ச்சியால் தடவப்பட்ட தென்றல் காற்று. (சோரா மறுக்கும்) – என்னை மயக்கும்படியும் செய்கிறது. (வகை அறியேன்) – இந்தக் காற்று என்னை எப்படித் துன்பம் செய்கிறது என்று விளக்க முடியாதபடி உள்ளது.

திருமங்கை ஆழ்வார் திருவடிகளே சரணம்

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

நம்பெருமாள் திருவடிகளே தஞ்சம்

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

## தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த

# திருமாலை
(பகுதி – 3)

1. காவல் இல் புலனை வைத்துக் கலி தன்னைக் கடக்கப் பாய்ந்து
நாவலிட்டு உழி தருகின்றோம் நமன்தமர் தலைகள் மீதே
மூவுலகு உண்டு உமிழ்ந்த முதல்வ நின் நாமம் கற்ற
ஆவலிப்புடைமை கண்டாய் அரங்க மாநகர் உளானே

பொருள் – திருவரங்கம் என்னும் மிகப்பெரிய திருநகரில் கண்வளர்பவனே. ஸ்ரீரங்கநாதா. ப்ரளயத்தின்போது அனைத்து உலகங்களையும் திருவயிற்றிலே பத்திரமாக வைத்துக் காத்து, ஸ்ருஷ்டி காலத்தில் அவற்றை மீண்டும் வெளியில் வைத்தவனே. அனைத்திற்கும் காரணமாக உள்ளவனே. உன்னுடைய திருநாமத்தை நாங்கள் கற்றுள்ளோம் என்னும் கர்வத்தால் நிகழ்வது என்ன? எங்கள் புலன்கள் நாங்கள், எங்களது கட்டுப்பாட்டில் வைக்காமல், அவற்றின் போக்கில் அலையவிட்டோம். அதனால் பாவங்கள் சூழ்ந்தபோதிலும், உன்னுடைய திருநாமத்தின் மேன்மையால் அவற்றை உதறினோம். இந்த வெற்றியைக் கொண்டாட, யமனின் தூதர்களின் தலைகளின் மீது நடனமாடியபடி உள்ளோம்.

அவதாரிகை – திருநாமம் யமவச்யத்தையைத் தவிர்த்துத் தரும் என்று இதினுடைய பாவநத்வத்தையும், திருநாமம் கற்றாருடைய ராஜகுலமஹாத்ம்யத்தையும் சொல்லுகிறது.

விளக்கம் – பெரியபெருமாளின் திருநாமம் என்பது யமனுக்கு வசப்படுவதைத் தவிர்க்கும் என்று கூறுவதன் மூலம் அதன் மேன்மையை விளக்குகிறார். மேலும் அந்தத் திருநாமத்தைக் கற்றவர்கள் அரசகுலத்தின் பெருமையை ஒத்த பெருமை அடைவார்கள் என்றும் கூறுகிறார்.

வ்யாக்யானம் – (காவலில் புலனை வைத்து) – காவலில்லாதபடி இந்த்ரியங்களை வைத்து. அதாகிறது, மேல்சொல்லுகிற லாபங்களுக்கு அனுகூலமாகச் செய்ததொன்றில்லை என்கையும், அவ்வளவேயன்றிக்கே, ந்ருபசு: என்னும்படியே விஷயப்ராவண்யங்களில் நியதியின்றிக்கே போந்தபடியும், விஹிதங்களை அனுஷ்டித்தல், நிஷித்தங்களைக் கைவிடுதல் செய்யாதவன் என்கை. இதுக்கு அடியாகக் கொண்டு இழிந்த ஸ்ரீவிஷ்ணுதர்மத்திலும், ராகாதிபிரநிர்ஜிதை: என்று அஜிதேந்த்ரியரானவர்களுக்கும் பகவத்ப்ராப்த்யுபாயமேது என்றிறே கேட்டது. ஆக இப்படிச் சேதனன் தான் மூலையடியே திரிந்தாலும் அவன் தோஷங்களைப் போக்கி, மேல் சொல்லுகிற நன்மைகளைக் கொடுக்கும்படியாய்த்துத் திருநாமத்தினுடைய ப்ரபாவமிருப்பது. ஒருவன் விஷதஷ்டனானால், விஷவித்யையில் குசலனாயிருப்பானொருவன் – நீ சுகமே எண்ணெய் வார்க்கவுமாம், குளிக்கவுமாம், உறங்கவுமாம், ஸ்வைரஸஞ்சாரம் பண்ணவும் அமையும், நான் அழகிதாகப் போக்கித் தருகிறேன் – என்னுமிறே. அப்படியேயாய்த்து ஸம்ஸார விஷதஷ்டனைக் குறித்து திருநாம ப்ரபாவமிருப்பது.

விளக்கம் – எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாதபடி புலன்களை வைத்து. இனி வரப்போகும் பாசுரங்களில், தான் இவன் மூலமாகப் பெற்ற பயன்களுக்கு உபாயமாக எதனையும் செய்யவில்லை என்று கூற உள்ளார், ஸ்தோத்ர ரத்னம் (58) – ந்ருபசு –

மனித வடிவம் கொண்ட பசு – என்பதற்கு ஏற்ப விலங்குகள் போன்று எந்தக் கட்டுப்பாடும் இன்றி விஷயங்களில் ஈடுபடும் நிலையில் உள்ளதாகக் கூறுகிறார், சாஸ்த்ரங்கள் விதிப்பதைச் செய்யாமலும், தடுப்பதைச் செய்தபடியும் தாம் இருப்பதாகக் கூறுகிறார். இந்தப் ப்ரபந்தத்தின் கருத்துகளுக்கு ஆதாரமாக உள்ள விஷ்ணுதர்மம் – ராகாதிபிரநிர்ஜிதை: – வெல்லப்படாமல் உள்ள மனம் யோகங்களுக்கு தகுதி பெறாதது – என்று கூறியது. இதன் மூலம் – புலன்களி வெல்ல இயலாமல் உள்ளவர்கள் பகவானை அடையும் உபாயம் என்ன – என்று கேட்கப்பட்டது. இவ்விதம் சேதனன் உலக விஷயங்களில் சிக்குண்டு, அதிலேயே மூழ்கியபடி இருந்தாலும், அவனுடைய தோஷங்களை நீக்கி, இந்தப் ப்ரபந்தத்தில் கூற உள்ள பல நன்மைகளையும் அளிக்கவல்ல மேன்மைகள் உள்ளது பெரியபெருமாளின் திருநாமம் ஆகும். ஒருவன் விஷம் நிறைந்த பூச்சியால் கடிக்கப்பட்டான் என்று வைத்துக் கொள்வோம். அவன் விஷத்தைப் போக்கவல்ல ஒருவனை அணுகும்போது, அந்த வைத்தியன் – உனது விருப்பப்படி நீ எண்ணெய் தேய்த்து நீராடலாம், உறங்கலாம், எதனையும் அனுபவிக்கலாம், இந்த விஷத்தை நான் நீக்கிவிடுகிறேன் – என்பான் அல்லவா? ஸம்ஸாரம் என்னும் விஷத்தால் பீடிக்கப்பட்ட ஒருவனுக்கு இந்தத் திருநாமம் செய்யும் நன்மையும் இது போன்றே ஆகும்.

வைத்து என்கிற இது, புத்திபூர்வகமாக அநீதியிலே மூட்டிப்போந்தேன் என்கை. காவல் இல்லாதபடி என்றால் சப்தம் வசிக்குமோ என்னில், மீமாம்ஸகர் சப்தத்தை நியமித்தாகிலும் அர்த்தத்தை முக்யமாகக் கொள்ளுமாபோலே, இங்கும் அர்த்தகௌரவத்தாலே சப்தத்தை நியமித்துச் சொல்லுகிறோம். அங்ஙனன்றியே, காவலில் புலனை வைத்து என்னவுமாம். அந்தப் பக்ஷத்திலே இது ஸாதநகோடியிலே புகக்கடவது. அதாவது இதர விஷயங்களிலே மண்டித் திரிந்த இந்த்ரியங்களை, திருநாமத்தை அண்டைகொண்ட பலத்தாலே சிறையிலே வைத்தபடி, அராஜகமாய்க் கிடந்த காலம் குறும்பு செய்தாரை, ராஜகீயமானவாறே, ராஜாவை அண்டைகொண்டு சிறையிலே வைக்குமாபோலே. அதவா அப்ராப்த விஷயங்களிலே மண்டித் திரிந்த இந்த்ரியங்களை ப்ராப்த விஷயங்களிலே மூட்டினேன் என்னவுமாம். பும்ஸாம் த்ருஷ்டிசித்த அபஹாரிணம் என்னும்படியான விஷயமாகையாலே அப்ராப்த விஷயங்களில் போகாதபடி தன்பக்கலிலே ஆக்கிக் கொள்ளவல்ல வயிரவுருக்கான விஷயமிறே.

விளக்கம் – பாசுரத்தில் உள்ள வைத்து என்னும் பதம், தவறு என்று அறிந்தபோதிலும் தவறான செயல்களில் ஈடுபட்டு வந்ததைக் கூறியது. காவலில் என்று உள்ள பதமானது – காவல் இல்லாதபடி – என்று பொருள் தருமா என்ற கேள்வி எழலாம். மீமாம்ஸகர்கள் சொல்லுக்கு ஏற்ற வடிவம் இல்லையென்றாலும், பொருளின் முக்கியம் கருதி ஏற்பது போன்று, திருநாமத்தின் வைபவம் கருதி இங்கு இப்படியே பொருள் கொள்வதில் தவறில்லை. இவ்விதம் கொள்ளாமல், புலன்களைக் கட்டுப்பாட்டில் வைத்து – என்றும் பொருள் கொள்ளலாம். இவ்விதம் பொருள் கொண்டால் – இவர் தனது புலன்களை ஸாதனங்கள் செய்து கட்டுப்படுத்தவில்லை, திருநாமத்தின் பலனால் ஆகும் – என எடுத்துக் கொள்ளவேண்டும். இதன் மூலம் – உலக விஷயங்கள் பலவற்றிலும் சுற்றித் திரிந்த தனது புலன்களை, திருநாமத்தின் உதவியுடன் வெற்றி கொண்டு, சிறையில் அடைத்தார் – என்று கருத்து. ஒரு நாட்டில் அரசன் இல்லாதபோது தவறு செய்தவர்களை, அரசன் மீண்டும் வந்த பின்னர் சிறையில் அடைப்பான். இது போன்று, தவறான விஷயங்களில் திரிந்த தனது இந்த்ரியங்களை, பகவத் விஷயத்தில் ஈடுபடுத்தினேன் என்றார். இராமாயணம் அயோத்யா காண்டத்தில் – பும்ஸாம் த்ருஷ்டி சித்தா அபஹாரிணாம் – ஆண்களின் கண்கள், சிந்தனை ஆகியவற்றைக்கூட இராமன் அபகரித்தான் – என்று கூறப்பட்டது அல்லவா? இப்படியாக பகவத் விஷயம் உயர்வாக உள்ளதால், புலன்கள் மற்ற விஷயங்களில் அலைமோதாமல் தடுத்து, தன் பக்கம் இழுப்பதற்கு ஏற்றபடி பகவத் விஷயம் உள்ளது.

(கலி தன்னைக் கடக்கப் பாய்ந்து) – அஜிதேந்த்ரியத்வத்துக்கு அடியான பாபராசியை வாஸனையோடே போக்கி. தன்னை என்றது த்ருஷ்டத்தில் விஷயப்ராவண்யஹேது, அத்ருஷ்டத்தில் நரகஹேது, பகவத் வைமுக்யஹேது, தேஹாத்மாபிமாந ஹேது. இன்னமும் அநர்த்தங்களுக்கு அடியான கனத்தை நினைத்து என்னை நியமித்துப் போந்தது தன்னையே, நான் இப்போது நியமித்தேன் என்கை. கடக்க என்றது அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரிலே ஒருவன்

என்னலாம்படியிருக்கை. அதாகிறது வந்து கழிந்தது என்று தோற்றாதபடியிருக்கை. கலி என்றது காலபரமானபோது க்ருதயுக புருஷர்களிலே ஒருவன் என்று சொல்லலாம்படியிருக்கை. திருவடி ஸமுத்ரதரணம் பண்ணினாற்போலே இவர் பாபஸமுத்ரத்தைக் கடக்க வல்லவரானார்.

விளக்கம் – (கலி தன்னைக் கடக்கப் பாய்ந்து) – தன்னுடைய புலன்களை தன்வயப்படுத்தியபோதிலும், அவற்றை மீண்டும் பாவங்களுக்கு இட்டுச் செல்லக்கூடிய பாவங்களை நீக்கிவிட்டேன் என்றார். தன்னை என்ற பதம் மூலம் கூறப்படுவது – பாவங்களின் மூலம் உலக விஷயங்களில் நாட்டம் ஏற்படுகிறது, நரகத்தை உண்டாக்குகிறது, எம்பெருமானிடமிருந்து விலகச் செய்கிறது, உடலே ஆத்மா என்ற எண்ணம் உண்டாகச் செய்கிறது, மேலும் பல தீமைகளை ஏற்படுத்துகிறது – என்பதாகும். இதனையே தன்னை என்ற பதம் மூலம் கூறினார் எனலாம். அல்லது தன்னை என்ற பதம் மூலம் – என்னை இதுவரை கட்டுப்படுத்தி வந்த பாவங்களை நான் இப்போது கட்டுப்படுத்தினேன் – என்று கூறுவதாகவும் கொள்ளலாம். கடக்க என்ற பதம் மூலம் – இந்த ஆழ்வார் ஒரு காலத்தில் ஸம்ஸாரத்தில் ஒருவராக இருந்தார், இப்போது இல்லை – என்று பலரும் கூறும்படி உள்ள நிலை கூறப்பட்டது. கலி என்ற பதம் மூலம் கலி காலம் என்பதைக் கூறவில்லை எனக்கொண்டால், தான் பாவங்களே இல்லாத க்ருத யுகத்தைச் சேர்ந்தவன் என்ற பொருள் வருமாறு கூறியதாகவும் கொள்ளலாம். அனுமன் மிகவும் எளிதாக கடலைக் கடந்தது போன்று, இவர் பெரியபெருமாளின் திருநாமம் காரணமாகப் பாவம் என்னும் கடலை எளிதாகக் கடந்தேன் என்றார்.

நின்னாமங்கற்ற என்று திருநாம வைபவத்தாலே வந்த இத்தைத் தந்தலையாலே வந்ததாகச் சொல்லுவானென் என்னில், திருநாமத்துக்குள்ளதொரு ஸ்வபாவமாய்த்து இது. இராமடமூட்டுவாரைப்போலே முகம் தோற்றாமே நின்று உபகரிக்கையாலே, இவன் தானே செய்துகொண்டானாக அபிமாநிக்கலாம்படியிருக்கும். இனி, பலம் தன்னதாகையாலே பாய்ந்து என்னத் தட்டில்லை. தாம் தேஹ ஹம்ஸ்ருஷ்டராயிருக்கச் செய்தேயும், இத்தை கடந்து என்னலாம்படியிறே பெரியபெருமாள் இவரை விஷயீகரித்தது.

விளக்கம் – நின் நாமம் கற்ற என்று திருநாமத்தின் பெருமையால் பாவம் என்னும் பெருங்கடலைக் கடந்ததாகக் கூறிவிட்டு, தானே அதனைக் கடந்ததாக ஏன் கூறவேண்டும்? இது திருநாமத்தின் பெருமையாகும். வீட்டில் கோபித்துக் கொண்டு சத்திரம் ஒன்றில் தங்கும் பிள்ளைக்கு, அந்தச் சத்திர உரிமையாளர் மூலம், அவனது தாய் உணவு அளிக்கிறாள். இது தெரியாமல், அந்தப் பிள்ளை தன்னுடைய முயற்சி காரணமாக உணவு கிட்டியதாக எண்ணுகிறான். இது போன்றே திருநாமத்தின் மேன்மையால் ஒருவனின் பாவங்கள் நீங்கியிருக்க, அவன் தன்னுடைய முயற்சியால் நீங்கியதாக எண்ணுவது இயல்பே ஆகும். அதனால் தான் பாவங்களை பாய்ந்து கடந்ததாகக் கூறுவதில் தவறில்லை. இந்த உடலுடன் உள்ளபோதும், பாவங்களைக் கடந்து விட்டதாக இவர் கூறும் அளவிற்கு, பெரியபெருமாள் இவரை ஆட்கொண்டான்.

(நாவலிட்டுழிதருகின்றோம் நமன் தமர் தலைகள் மீதே) – பாப பலத்தை அனுபவிக்கும் யமனுடைய தலையிலும், அவன் மணாட்டி தலையிலும் அடியிட்டு ஸஞ்சரியா நின்றோம், நலிந்து போந்த யமபடரை ஒருபேரையிட்டுத் துகைக்கிறார் காணும். நாவலோ நாவல் என்றும், அறையோவறை என்றும் தோற்றவர்கள் முன்னே ஜயித்தவர்கள் சொல்லும் சொல்லு. முன்பே யமாதிகள் பேர் கேட்க அஞ்சிக் கிடந்தவர், திருநாமத்தை அண்டை கொண்ட பலத்தாலே யமன் வாசலிலே சென்று அறை கூவுகிறார் இப்போது. வாலி பேர் கேட்க அஞ்சி, சுரமடைந்து கிடந்த மஹாராஜர், பெருமாளை அண்டை கொண்ட பலத்தாலே கிஷ்கிந்தா த்வாரத்திலே சென்று அறை கூவினாற்போலே, அங்கு நாமிபலம், இங்கு நாம பலம்.

விளக்கம் – (நாவல் இட்டு உழி தருகின்றோம் நமர் தமர் தலைகள் மீதே) – பாவங்களின் பலனை அளிக்கவல்ல யமனின் தலை, அவன் மனைவியின் தலை போன்றவற்றில் பயம் இன்றி உலவுகிறோம். தன்னை துன்பத்தில் ஆழ்த்தவந்த யமதூதர்களை திருநாமத்தின் மூலம் துகைக்கிறார். நாவலோ நாவல், அறையோ அறை என்று வெற்றி பெற்றவர்கள் தோற்றவர்கள் முன்பாகக் கூறுவது வழக்கமாகும். முன்பு யமனின் பெயரைக் கேட்டாலே அச்சம் கொள்ளும் இவர், இப்போது அவன் பட்டணத்தின் வாசலில் நின்று முழங்குகிறார். வாலியின் பேரைக்

கேட்டவுடன் அச்சம் கொண்டு, ஜ்ரம் கொள்ளும் சுக்ரீவன், இராமனை அண்டி, அவன் பலத்தாலே கிஷ்கிந்தாவிற்குச் சென்று அறைகூவல் விடுத்தது போன்று இவர் செய்கையும் உள்ளது. அங்கு திருநாமத்தைக் கொண்ட நாமியாகிய இராமன் அருகில் இருந்த பலம், இங்கு நாமியாகிய இராமனைவிட உயர்ந்த அவன் திருநாமம் உள்ள பலம்.

உழிதருகின்றோம் என்றது, தம் மிடுக்குத்தோற்ற நின்று நிர்ப்பயஸஞ்சாரம் பண்ணுகிறபடி. பாபத்துக்கு நீ எழுதிவைத்த பட்டோலையைக் கொண்டுவரவில்லையாகில் புறப்படாய் என்றாற்போலே இருக்கிறதாய்த்து. உழிதருகின்றோம் என்கிற பஹுவசநத்தாலே, திருநாமம் ரஸிக்க வாயிலே பட்டவாறே, இவர் சதசாதகமாகப் பனைத்தபடி. அதவா, இதின் இயலை அப்யஸித்து இதில் அத்வேஷமுடையாரையும் கூட்டிக்கொள்ளுகிறாய்த்து. ஸமுத்ரலங்கநம் முதலாக லங்கையிலுண்டான பராக்ரமமெல்லாம் திருவடிதான் ஒருவனுமே செய்தானாயிருக்க, பிராட்டியைக்கண்ட ப்ரீதிக்கு போக்குவீடாக மதுவநமழிக்கிற பலத்திலே எல்லா முதலிகளுக்கும் அந்வயமுண்டானாற்போலே, ஒருத்தனுக்கு ராஜகுலஸம்பந்தம் உண்டானால் அவன் பந்துக்களும், அவனை என்னென்றாரும் அடங்க வாழக்கடவதிறே. அவ்வளவும் இல்லையாகிறதன்றே பகவத்ஸம்பந்தத்துக்கு.

விளக்கம் – உழிதருகின்றோம் என்னும் பதமானது, தன்னுடைய வலிமை வெளிப்படும்படியாக, சிறிதும் பயம் இன்றி செல்வதைக் கூறியது. யமனிடம் – எங்களது பாவக்கணக்கு அனைத்தையும் நீ எழுதியிருப்பாய், அவற்றை உனக்கு சாமர்த்தியம் இருந்தால் எங்கள் முன்பு கொண்டுவா – என்று கூறுவதாக உள்ளது. உழிதருகின்றோம் என்று பன்மையில் கூறுவதன் மூலம், திருநாமத்தின் இனிமையை இவர் நூறு மடங்காக அனுபவித்ததைக் கூறுகிறார். அல்லது இதில் இவருடன் பலரும் ஈடுபட்டனர் என்று கூறுவதாகவும் கொள்ளலாம். அனுமன் மட்டுமே கடலைக் கடந்து சென்று, சீதையைக் கண்ட மகிழ்ச்சியில் மதுவனத்தை அழித்தான் என்றபோதிலும், வானரங்கள் அனைத்தும் செய்ததாகவே கொள்வார்கள், ஒருவனுக்கு அரசனுடன் நட்பு உண்டானால், அவனுடன் சேர்ந்து அவனது பந்துக்களும் நண்பர்களும் வாழ்வர் என்றே கொள்ளவேண்டும். இது போன்றே, இவர் திருநாமத்தின் மேன்மை கற்றதனால், மற்றவர்களுக்கும் மேன்மை ஏற்படுகிறது என்று கூறும் அளவிற்கு பகவத் ஸம்பந்த மேன்மை உள்ளது.

உழிதருகின்றோம் என்று பலரையும் கூட்டிக் கொள்ளுமாகையாலே, இவர்களுக்கெல்லாம் ஸஞ்சாரஸ்தலம் வேணுமென்று அவன் பரிகரத்தையும் கூட்டிக்கொள்ளுகிறார். லோகத்திலே பாபம் பண்ணினார் தத்பலானுபவத்துக்கு அஞ்சி, யமன் பேரிடுவார். அவனுடைய லேககன் பேரிடுவாராய், யமம் தர்ப்பயாமி, சித்ரகுப்தம் தர்ப்பயாமி என்று ஆராதியா நிற்க, திருநாமத்தை அண்டை கொண்ட பலத்தாலே அவர்கள் தலையிலே அடியிடுகிறோம் என்கிறாரிறே இவர், தம்மைக் கீழ் நலிந்த யமாதிகளை இப்போது ஒரு பேரையிட்டுத் துகைக்கிறார் காணும், இவர் தமக்கு விஜயமாகச் சொல்லுகிறாரித்தனை போக்கி, அவன்தான் தன் தலைகண்டது திருநாமங்கற்றார் திருவடிகளிலே வணங்கவென்றாய்த்து இருப்பது. ப்ரணாமம் யே அபிகுர்வந்தி தேஷாம் அபி நமோ நம: என்னக்கடவதிறே.

விளக்கம் – உழிதருகின்றோம் என்று பலரையும் சேர்த்துச் சொல்லுகிறார். ஆக அனைவரும் உலவ இடம் வேண்டும் என்பதால், நமன்தமர் என்று யமனின் தூதர்களையும் கூறினார். இந்த உலகில் பாவம் செய்தவர்கள் – பாவங்களின் பலனுக்கு அஞ்சி, தங்களது பிள்ளைகளுக்கு யமனின் பெயரைச் சூட்டுவது, அவனுடைய கணக்கை சரிபார்க்கும் சித்ரகுப்தனின் பெயரைச் சூட்டுவது, யமன் தர்ப்பயாமி–சித்ரகுப்தன் தர்ப்பயாமி என்று கூறுவது – போன்றவற்றை நாம் காணலாம். ஆனால் திருநாமத்தின் துணை காரணமாக இவர், அவர்களின் தலைகள் மீதே நடக்கிறோம் என்றார். இத்தனை காலம் தன்னை துன்பம் செய்த யமனையும் அவன் தூதர்களையும் எவ்விதம் வாட்டுகிறார் பாருங்கள். இங்கு ஆழ்வார் தன்னுடைய வெற்றியாக இதனைக் கூறியபோதிலும், யமன் தன்னுடைய தலையானது பெரியபெருமாளின் அடியார்களின் திருவடிகளின் கீழ் வணங்கியபடி உள்ளதைப் பெரிதாக எண்ணுவான் என்பது கருத்து. விஷ்ணுதர்மத்தில் – ப்ரணாமம் யே அபி குர்வந்தி தேஷாம் அபி நமோ நம: – யார் ஒருவன் விஷ்ணுவை நமஸ்காரம் செய்கிறானோ, அவனுக்கு என் நமஸ்காரம் – என்று யமன் கூறினான் அல்லவோ?

ஸ்வபுருஷமிவீக்ஷ்ய பாசஹஸ்தம் ப்ரபுரஹமங்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம் என்றது கேவலம் தேஹபோஷணபரராய் இருப்பார்க்குக்காண் நான் நிர்வாஹகனாயிருப்பது, மற்றைப்படியே வைஷ்ணவர்கள் எனக்கு நிர்வாஹகராய்க்காண் இருப்பர் என்றபடி. திறம்பேன்மின் கண்டீர் இறைஞ்சியும் சாதுவராய்ப் போதுமின்களென்றான் இவர்களைக் கண்டால் அனுகூலவ்ருத்திகளைப் பண்ணி தாந்தராய்ப்போருங்கோள் என்கிறான். இப்படித் தானும் பயப்பட்டுத் தன் படரையும் நியமித்துக்கொண்டிறே யமனிருப்பது.

விளக்கம் – விஷ்ணு புராணம் – ஸ்வபுருஷமிவீக்ஷ்ய பாசஹஸ்தம் ... ப்ரபுரஹமங்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம் – பாசக்கயிற்றுடன் நிற்கும் தன்னுடைய தூதர்களிடம் யமன் கூறுயது, நான் மற்றவர்களுக்கு மட்டுமே ப்ரபு ஆவேன், வைஷ்ணவர்களுக்கு அல்ல – என்றான். இப்படியாக, தன்னுடைய உடலை வளர்ப்பவர்களுக்கு மட்டுமே தான் எஜமானன் என்றும், வைஷ்ணவர்கள் தனக்கு எஜமானர்கள் என்றும் யமன் கூறியது காண்க. நான்முகன் திருவந்தாதியில் (68) – திறம்பேன்மின் கண்டீர் – என்பதில் – வைஷ்ணவர்களைக் கண்டவுடன் அவர்களுக்கு நமஸ்காரம் செய்து விலகுவீர்களாக – என்று யமன் கூறியதாக ஆழ்வார் அருளிச் செய்தது காண்க. இப்படியாக தானும் வைஷ்ணவர்களைக் கண்டு பயப்பட்டு, தன்னுடைய தூதர்களையும் அவ்விதமே இருக்கும்படி ஆணை பிறப்பிக்கும் நிலை திருநாமத்தின் மேன்மையால் வந்தது.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

## ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார் திருநக்ஷத்ர சிறப்புப் பகுதி

ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வாரின் திருநக்ஷத்ரம் மார்கழியில் கேட்டை (06.01.2008) ஆகும். அதற்கான சிறப்புப் பகுதியாக பெரியதிருமுடியடைவு என்ற நூலில் இருந்து தொண்டரடிப்பொடியாழ்வார் பற்றிய பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன. இவை எளிதான தமிழிலேயே உள்ளதால் மேலும் விளக்கப்படவில்லை.

## கோயில் கந்தாடைநாயன் அருளிச்செய்த பெரியதிருமுடியடைவு

ஸ்ரீமத் வனமாலிகாம்சபூதரான தொண்டரடிப்பொடியாழ்வாருக்குத் திருவவதாரஸ்தலம் சோழதேசத்தில் திருக்காவேரி தீரத்திலே திருமண்டங்குடி என்கிற அக்ரஹாரம். திருநக்ஷத்ரம் கலியுகம் நூற்றெட்டு ஸம்வத்ஸரம் சென்ற பின்பு, ப்ரபவ ஸம்வத்ஸரம் மார்கழி மாஸத்தில் கேட்டை. திருத்தகப்பனார் ஸகவேத விசாரதரென்கிற பூர்வசிகை ப்ராஹ்மணோத்தமர். திருநாமங்கள் விப்ரநாராயணர், பக்தாங்க்ரிரேணு, அன்பர்தாள்தூளி, தொண்டரடிப்பொடியாழ்வார். ஆசார்யர் ஸேனை முதலியார். திருவாராதனம் நம்பெருமாள். இவருடைய ஆச்ரமம் ப்ரஹ்மசர்யம். இவர் அமுது செய்கிறது ஸ்ரீவைஷ்ணவ திருமாளிகைகளில் மாதுகரம். கைங்கர்யம் திருநந்தவனம், திருமாலை. இருப்பிடம் நம்பெருமாள் கோயில். இவரருளிச் செய்த ப்ரபந்தங்கள் திருப்பள்ளியெழுச்சி பத்துப்பாட்டும், திருமாலை நாற்பத்தைந்து பாட்டும். நூற்றைந்து திருநக்ஷத்ரமெழுந்தருளியிருந்தார்.

## தனியன்

தமேவ மத்வா பரவாஸுதேவம்
ரங்கேசயம் ராஜவதர்ஹணீயம்
ப்ராபோதிகீம் யோ அக்ருத ஸூக்திமாலாம்
பக்தாங்க்ரி ரேணும் பகவந்தமீடே

பொருள் – திருவரங்கத்தின் சக்ரவர்த்தியாகத் திகழ்கின்ற அழகியமணவாளனை, பரவாஸுதேவன் என்று உணர்ந்து, திருப்பள்ளியெழுச்சி என்னும் ப்ரபந்தத்தை அருளிச் செய்த தொண்டரடிப்பொடியாழ்வாரை நான் துதிக்கிறேன்.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்